விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 03 ஞாயிற்றுக்கிழமை (19.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 274

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

மன்னார் கள்ளியடி பகுதியில்

## 14 வயது மாணவன் வீட்டில் சடலமாக மீட்பு

கொலை என தாய் சந்தேகம்

(மன்னார்)
மன்னார் கள்ளியடிப் பகுதியில் 14 வயது மாண வன் ஒருவன் அவரது 19

கொரோனாவால்

## மேலும் ஒரு வைத்தியர் பலி

(கொழும்பு)
கொரோனா நோயா ளர்களைக் குணப் 19

ஐ.நா கூட்டத்தொடரில்

## எதிர்வரும் புதன்கிழமை ஜனாதிபதி உரையாற்றுவார்



(கொழும்பு)
ஐ.நா கூட்டத் தொடரில் எதிர்வரும் புதன் கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரையாற்றவுள்ளார். 19

கொரோனா

## +1,983

(கொழும்பு)
கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 1,983 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
சுகாதார அமைச் 19

மரணங்களில் வீழ்ச்சி

## நாட்டில் மேலும் 84 பேர் பலி


(கொழும்பு)
இலங்கையில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்தைக் கடந்துள் ளது. 19

லொஹானின் துப்பாக்கி தற்செயலாக வெடித்திருந்தால்

# நாங்கள் கொல்ல முயன்றதால் சுட்டதாகக் கதை கட்டியிருப்பர்

சிறை சென்ற மனோ கணேசனிடம் தமிழ் அரசியல் கைதிகள் ஆதங்கம்

(கொழும்பு)
இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தயின் கையிலிருந்த துப்பாக்கி தற்செயலாக வெடித்திருந் தால் விடுதலைப் புலிச் சந்தேகநபர்களான நாங் கள், அவரை கொலை செய்ய முயன்றதால் பதிலுக்கு அவர் சுட்டார் என கதை கட்டியிருப்பார்கள் என அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் தன்னிடம் தெரிவித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
(19ஆம் பக்கம் பார்க்க)



## இராச வீதியில் விபத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கோப்பாய் இராச வீதியில் நேற் றுக் காலை இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக 19

## சுகாதார விதிமுறைகளை மீறி ஓமந்தையில் ஆலய கும்பாபிஷேகம்

ஆலய குருக்கள் உட்பட 11 பேருக்கு கொரோனா

(வவுனியா)
வவுனியா, ஓமந்தைப் பகுதி யில் உள்ள பிள்ளையார் ஆல யத்தில் சுகாதார அறிவுறுத்தல் களை மீறிகும்பாபிஷேகம் இடம் பெற்ற நிலையில், சுகாதாரப் பிரிவினர் கலந்து கொண்டவர் களிடம் மேற்கொண்ட அன்டிஜன் பரிசோத 19

## ஊரடங்கு அமுலில் இருக்கும் நேரம் மதுக்கடைகளை திறக்க அனுமதித்தது யார்?

சுகாதார அமைச்சு கடும் அதிருப்தி

(கொழும்பு)
தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் இருக்கும்நேரம் மதுக் கடைகளை திறக்க அனுமதித் தது யார்? என கேள்வி எழுப்பி யுள்ள சுகாதார அமைச்சு தனது கடுமையான அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.
தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் இருக்கும் நேரத்தில் மதுபானக் கடைகளை மீண்டும் திறக்க அனுமதி வழங்குவது கொரோனா வைரஸ் வேகமாகப் பரவ வழிவகுக்கும் என்று சுகாதார அமைச்சு 19

## மதுச்சாலையை திறந்தது கவலைக்குரிய தீர்மானம்

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)
மதுபானசாலைகளைத் திறப் பதற்கு எடுத்துள்ள தீர்மானம் மிகவும் கவலைக்குரியதாகும்.
இது கடும் நெருக்கடிகளுக்கு மத்தியில் கோவிட் பரவலைக் கட் டுப்படுத்த முன்னெடுக்கப்பட்ட சகல நடவடிக்கைகளையும் சீர் குலைக்கும் வகையி லான செயற்பாடாகும் 19

## மதுபானசாலைகளால் தொற்று அதிகரிக்கும்

இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அதிருப்தி

(கொழும்பு)
ஊரடங்கு காலத்தில் மதுபான சாலைகளைத் திறக்க அரசு அனுமதித்ததற்கு 19

## தீயில் எரிந்த குடும்பஸ்தர் பலி

அல்லைப்பிட்டியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
தவறுதலாக தீ பற்றிய தால் எரிகாயங்களுக்குள் ளான நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் 19

கே.கே.எஸ் இல் சடலமாக மீட்கப்பட்டவர்

## சுத்தியலால் அடித்தே கொலை செய்யப்பட்டார்

மருத்துவ அறிக்கையில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறை வீதியில் சடலமாக மீட்கப்பட்ட வர் மொட்டையான 19

# மரண அறிவித்தல்

## காத்தார் வேலும்மயிலும்



**தோற்றம் : 02.11.1942**
**மறைவு : 15.09.2021**

பளவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காத்தார் வேலும்மயிலும் கடந்த 15.09.2021 (புதன்கிழமை) அன்று இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காத்தர் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் சுந்தரம் - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜகுலோசனாவின் அன்புக் கணவரும் திருமதி இ.வேல்ராஜினி(ஆசிரியர்- லண்டன்), திருமதி மு.வேல்குலோஜினி (ஆசிரியர் - யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை), திருமதி ஞா.வேல்றமணா (லண்டன்), திருமதி அ.சுவர்ணா (ஆசிரியர் - யா/பொலிகண்டி இ.த.க. பாடசாலை), செல்வி வே.கார்த்திகா (பட்டதாரி பயிலுநர் - கரவெட்டி பிரதேச செயலகம், உடுப்பிட்டி அ.மி. கல்லூரி), ஆகியோரின் பாசமிகு தந்தையும் சி.இளங்கீரன் (உரிமையாளர்- ஸ்ரீகணேசா சுப்பர் ஸ்ரோர் லிமிடெட், லண்டன்), பா.முகுந்தன் (யாழ். மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுநர் - மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), சி.ஞானச்சந்திரன் (உரிமையாளர் - பிறீமியர் எக்ஸ்பிறஸ், லண்டன்), ந.அண்ணாத்துரை (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும் மு.விஷ்ணுஜன், ஞா.பவிஷன், மு.மகிஷா, இ.அனுஜன், ஞா.அஜீஸ், ஞா.றகீனா, மு.விறுஜன், அ.ரிறுஸ்கா, அ.சுயானன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, அம்மா, சாமி, சிவப்பர், இராசம்மா, பசுபதி, தங்கவேல், இராசதுரை, வீரகத்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி வி.திருச்செல்வராணியின் அன்பு மைத்துனரும் வ.விக்னேஸ்வரனின் (ஆசிரியர் - யா / தேவரையாளி இந்துக் கல்லூரி) சகலனும் செல்வி வி.நிவேதா (மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்), வி.யதுசன் (மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20.09.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்
பளவத்தை 077 664 8996. 076 188 9897

# வவுனியா முதியோர் காப்பகத்தில் 50 பேருக்கு கொரோனா தொற்று

## மூவர் தொற்றால் மரணம்

(வவுனியா)

வவுனியாவில் உள்ள முதியோர் காப்பகம் ஒன்றில் 50 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த காப்பகத்தில் கோவிட் தொற்றுக் காரணமாக மூவர் மரணமடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியா, பம்பைமடு பகுதியில் உள்ள முதியோர் இல்லத்தைச் சேர்ந்த இருவர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கோவிட் தொற்றால் மரணமடைந்த நிலையில், நேற்று ஒருவர் மரணமடைந்துள்ளார்.

அத்துடன், குறித்த காப்பகத்தில் இருப்பவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 50 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ம-03)


**நெல்லியடியில் கடைக் கட்டடம் விற்பனைக்கு**

நெல்லியடிச் சந்திக்கு அருகாமையில் மேல்மாடியுடன் கூடிய கடைக் கட்டடம் விற்பனைக்குண்டு.

(K-2665)

**076 576 8514**


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
செல்வி **மு.கிருஸ்ணபாமினி**
அவர்களின் பாசமிகு தந்தை

## திரு. சரவணை முத்துலிங்கம்



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(7931)

பாடசாலைச் சமூகம்
யா / ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலயம்


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# நெஞ்சகலா நீங்கா நினைவு

## அஞ்சலி



யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா
கற்கைநெறியின் முதலாம் அணி மாணவனும்
உடற்கல்வி ஆசிரியருமாகிய
V.W. ஜெயநேசனின் அன்புத் தாயார்

## திருமதி பாலராணி விமலேந்திரநாதன்

**அவர்களின் பிரிவு ஈடுசெய்ய முடியாதது.**

மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து பிள்ளைகளை சமூகத்தில் பிரகாசிக்கச் செய்த தாயாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரை வேண்டுவதுடன் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பிறப்பு : 24.12.1954**
**இறப்பு : 07.09.2021**

உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறியின்
முதலாம் அணி நண்பன்
நா. விஜயகுமார்

(7930)

## குருதித் தட்டுப்பாடு

# உயிர் காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு அழைப்பு

### யாழ். போதனாவின் இரத்தவங்கிப் பிரிவு வேண்டுகோள்



(குப்பிழான்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் மீண்டும் இரத்தத்திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினர் அறிவித்துள்ளனர். குறிப்பாக ஓ பொசிட்டிவ் **(O Positive)** இரத்தம் அவசரமாகத் தேவை. ஏற்கனவே இரத்ததானம் செய்து நான்கு மாதங்கள் பூர்த்தியானவர்கள் மற்றும் புதிதாக இரத்ததானம் செய்யக்கூடியவர்கள் உங்களுக்கு அருகிலுள்ள இரத்த வங்கிகளுக்குச் சென்று இரத்த தானம் செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு உதவுமாறு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கொவிட்-19 தடுப்பூசி செலுத்தியிருந்தால் செலுத்திய தினத்திலிருந்து ஒரு வாரத்தின் பின்னர் இரத்ததானம் செய்யலாம்.

கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தால் அது சுகமடைந்து தொற்று இல்லையென உறுதிப்படுத்திய தினத்திலிருந்து ஒரு மாதத்தின் பின்னர் இரத்ததானம் செய்யலாம் எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினர் மேலும் தெரிவித்தனர். (நி-4-18)

# ஜனாதிபதி, பிரதமர் வெளிநாட்டில்; நாட்டின் தலைவரானார் சபாநாயகர்



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வெளிநாடு சென்றுள்ள நிலையில் நாட்டின் தலைவராக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தற்காலிகமாகச் செயற்படவுள்ளார்.

அதன்படி, ஜனாதிபதி ஆட்சிக்காலத்தில் இது போன்ற ஒரு சம்பவம் நிகழ்வது இதுவே முதல்முறை என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# சுகாதார அமைச்சின் அனுமதியின்றி மதுபான நிலையங்கள் திறப்பு

**(கொழும்பு)**

**மதுபான நிலையங்கள் திறப்பது குறித்த தீர்மானம், சுகாதார அமைச்சின் தலையீடின்றி மேற்கொள்ளப்பட்டதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார். (நி-4)**

# அநுராதபுரம் சிறையில் சி.சி.ரி.வி இல்லையாம்

(கொழும்பு)

வெலிக்கடை மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலை வளாகத்தில் சிசிடிவி கமராக்கள் இல்லை என சிங்கள பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

லொஹான் ரத்வத்த அச்சுறுத்தியதாக தெரிவிக்கப்படும் சம்பவம் குறித்த விசாரணைகள் இடம்பெற்றுவரும் நிலையிலேயே இந்தச் செய்தி வெளியாகியுள்ளது.

மேலும் தற்போது அங்குனகொலபெலஸ்ஸ, களுத்துறை மற்றும் பூஸ்ஸ சிறைச்சாலைகளில் மட்டுமே இந்த வசதிகள் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே லொஹான் ரத்வத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைக்கு சிசிடிவி காட்சிகள் கிடைக்காது என்றும் சிறைச்சாலை தலைமையகம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் சிறைச்சாலைகளுக்கு வருபவர்கள் கையொப்பமிடும் பதிவுப் புத்தகத்தை கொண்டு, தேவையெனில் விசாரணையை மேற்கொள்ள முடியும் எனச் சிறைச்சாலை தலைமையகம் தெரிவித்துள்ளதாக குறித்த செய்தி அமைந்துள்ளது. (நி-4)

# ஊடக கற்கைகள் உயர் டிப்ளோமா யாழ். பல்கலையில் ஆரம்பிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கைகள் துறை வழங்கும் ஊடகக் கற்கைகளில் உயர் டிப்ளோமா கற்கைநெறி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமையன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா வினால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி சி. ரகுராம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலைப்பீடப் பீடாதிபதி கலாநிதி க. சுதாகர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நிகழ்நிலைத் தொழில்நுட்பம் வழியாக நடைபெற்ற இந்த ஆரம்ப நிகழ்வில், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஊடகக் கற்கைகள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

பல்கலைக்கழகம் சமூகத்திற்கு ஆற்றவேண்டிய கடமைகளில் ஒன்றாக, துறைசார் ஆர்வமிருந்தும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகத் தவறிய மாணவர்களுக்கும், தொழில்சார் ஊடகவியலாளர்களாகப் பணியாற்றுவோருக்கும் பல்கலைக்கழகக் கல்வி மூலம் உரிய தகைமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக இந்த ஊடகக் கற்கைகளில் உயர் டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பிக்கப்படுவதாக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா ஆரம்ப நிகழ்வில் தெரிவித்தார்.

இரண்டு வருட பகுதிநேரக் கற்கையாக ஆரம்பிக்கப்படும் உயர் டிப்ளோமா கற்கைநெறி துறைசார் விரிவுரையாளர்கள், சிரேஷ்ட ஊடகவியலாளர்கள், ஊடக ஆய்வாளர்கள் ஆகியோரின் கல்விசார் பங்களிப்புடன் சுயநிதிக் கற்கையாக முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# வாகன உதிரிப்பாகங்களின் விலையும் அதிகரிப்பு

**(கொழும்பு)**

**நாட்டில் வாகனங்களின் இயந்திரத்துக்குப் பயன்படுத்தப்படும் எண்ணெய் மற்றும் உதிரிப் பாகங்களின் விலை அதிகரித்துள்ளது என வாகன உரிமையாளர்களும் வாகன தொழில் நுட்பவியலாளர்களும் தெரிவித்தனர்.**

**வாகனங்களின் இயந்திரங்களுக்கு பயன்படுத்தப்படும் இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெய் மற்றும் வாகனங்களின் உதிரிப்பாகங்களின் விலை நூற்றுக்கு 20 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.**

**இதனால் பாரிய சிரமத்துக்குள்ளாகி இருப்பதாக வாகன உரிமையாளர்கள் மற்றும் வாகன தொழில்நுட்பவியலாளர்கள் தெரிவித்தனர். (நி-4)**

# நாட்டின் சனத்தொகையில் 50 வீதமானோருக்கு முழுமையாக தடுப்பூசி செலுத்தப்பட்டது

### சன்ன ஜயசுமன தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் மொத்த சனத்தொகையில் 50 வீதமானோருக்கு முழுமையாக தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை வரையான தரவுகளின் அடிப்படையில் நாட்டின் மொத்த சனத்தொகையான 2 கோடியே 19 இலட்சத்து 19 ஆயிரத்து 413 பேரில் அரைவாசியினருக்கு இரண்டு தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, நாட்டில் இதுவரை ஒரு கோடியே 9 இலட்சத்து 68 ஆயிரத்து 195 பேர் இரு தடுப்பூசிகளையும் செலுத்திக் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-4)

## ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள

# ஜனாதிபதி அமெரிக்கா பயணம்



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ளார்.

செப்டெம்பர் 21 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறும் ஐக்கிய நாடுகள் சபையின் 76 ஆவது பொதுச்சபைக் கூட்டத்தில் அவர் கலந்து கொள்ளவுள்ளார்.

குறிப்பாக ஜெனிவா, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நாடு விமர்சனங்களை எதிர்கொள்ளும் நேரத்தில், இந்த விஜயம் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் ஊடக சந்திப்பில் டலஸ் அழகப்பெரும தெரிவித்திருந்தார்.

பொருளாதாரத்தின் மீது கூடுதல் சுமையை ஏற்படுத்தாமல் இதுபோன்ற நிகழ்வுகளில் கலந்து கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (நி-4)

# அமெரிக்கா- மெக்ஸிக்கோவிற்கான இலங்கை தூதுவராக மகிந்த சமரசிங்க




(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

இவ்வாறு பதவி விலகிய அவர், அமெரிக்கா மற்றும் மெக்ஸிக்கோ ஆகிய நாடுகளுக்கான இலங்கை தூதுவராக நியமிக்கப்படவுள்ளார். (நி-4)

# ஐ.பி.எல் ஆட்டம் ஆரம்பம்

## மும்பை, சென்னை இன்று மோதல்



கிரிக்கெட் திருவிழாவான ஐ.பி.எல். இருபது-20 லீக் தொடர். ரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஆரம்பமாகவுள்ளது.ஐ.பி.எல். இருபது-20 லீக் தொடரின் 14ஆவது அத்தியாயத்தின் இரண்டாம் பகுதி போட்டிகள் இன்று ஐக்கிய அரபு அமீரகத்தில் மீண்டும் நடைபெறுகிறது. இந்த நிலையில் இதன் முதல் லீக் போட்டியில். நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸ் அணியும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் விளையாடவுள்ளன.

இதில் மும்பை அணிக்கு ரோஹித் சர்மாவும் சென்னை அணிக்கு டோனியும் தலைமை தாங்கவுள்ளன.

இதனிடையே சென்னை அணியின் வெளிநாட்டு வீரர்களான டு பிளெஸிஸ் உபாதைக் காரணமாக இன்றைய போட்டியில் விளையாடுவது சந்தேகத்திற்கிடமாகியுள்ளது. அத்துடன் சாம் கர்ரன் தனிமைப்படுத்தலில் இருப்பதால் இப்போட்டியை தவறவிடுவார்.

31 லீக் போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ள நிலையில். டெல்லி கெபிடல்ஸ் அணி புள்ளி பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. சென்னை அணி இரண்டாவது இடத்திலும் பெங்களூர் அணி மூன்றாவது இடத்திலும் உள்ளன.(4-6)

## நைரோபி கிரிக்கெட் லீக்கில் 6 இலங்கை கிரிக்கெட் வீரர்கள்

கென்யாவில் ஆரம்பமான நைரோபி கிரிக்கெட் லீக் (என்.சி.எல்.) இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரில் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் ஆறு பேர் பங்கேற்று வருகின்றனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்களான அஜந்த மெண்டிஸ். சாமர கப்புகெதர இருவருடன் உதார ஜயசுந்தர. லஹிரு கமகே. கிஹான் ரூபசிங்க, விக்கும் சஞ்சய ஆகியோரும் இந்த இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரில் பங்கேற்று வருகின்றனர்.

இதில் கிசுமு க்ரேன்ஸ் அணியின் ஆலோசகராக அஜந்த மெண்டிஸும், மொமபாஸா ஈகள்ஸ் அணியின் ஆலோசகராக சமார கப்புகெதரவும் செயற்படுகின்றனர்.

நாக்குரு பிளேமிங்கோஸ் அணிக்காக உர ஜயசுந்தரவும், எஸ்டொராட் ஹோக்ஸ் அணிக்காக லஹிரு கமகேவும், நைரோபி ஹோர்ன் பில்ஸ் அணிக்காக கிஹான் ரூபசிங்கவும். மசாகொஸ் வுல்டர்ஸ் அணிக்கா விக்கும் சஞ்சயவும் விளையாட ஒப்பந்தமாகியுள்ளனர்.

6 அணிகள் பங்கேற்கும் இப்போட்டித் தொடரானது கடந்த புதனன்று ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது.(4-6)



## சுத்தியலால்...

கொலை செய்துள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திலிருந்து 50 மீற்றர் தொலைவில் கடந்த வியாழக்கிழமை வீதியோரம் சுயநினைவற்ற நிலையில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

அவரை மீட்டு தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சேர்த்த போது. உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

சம்பவத்தில் நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த ம.ஜெனுசன் (வயது-24) என்ற ஒரு பிள்ளையின் தந்தை உயிரிழந்தார்.

சம்பவத்தையடுத்து அங்கு திரண்ட உறவினர்கள் அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்தனர்.

வியாழக்கிழமை இடம்பெற்ற இறுதிக் கிரியை வீடொன்றில் சிலருடன் அவர் முரண்பட்டுக் கொண்டார் என்றும் அவர்களே கொலை செய்துள்ளனர் என்றும் உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

அதனடிப்படையில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சம்பவ இடத்துக்கு அண்மையாக உள்ள கட்டடத் தொகுதியில் பெறப்பட்ட சிசிரிவி பதிவின் அடிப்படையில் மடத்தல் (பெரிய சுத்தியல்) உடன் பயணித்த நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் மல்லாகம் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு முற்படுத்தப்பட்டார். அவரை 14 நாட்கள் கட்டுக் காவலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் மொட்டையான ஆயுதம் ஒன்றினால் தலையில் தாக்கப்பட்டதனால் இளம் குடும்பத் தலைவர் உயிரிழந்தார் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ வல்லுநரினால் அறிக்கையிடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.(ம-3.33)


# மணிவிழா வாழ்த்து



19.09.2021 அன்று தனது மணிவிழாவையும் சேவை நிறைவையும் கொண்டாடும் எமது பாடசாலை ஆசிரியை

## செல்வி தனேஸ்வரி செல்லத்துரை

அவர்களை உள்ளத்தின் ஆழத்திலிருந்து வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.



வாழ்த்துக்கவி

கணிதம் கற்பிப்பதில் கலைத்தாய் நீங்கள்
கடின உழைப்பில் கடிகாரமும் நீங்கள்
குழந்தைகள் மனதில் குதூகலம் நீங்கள்
அன்பின் வழியில் தாய்மையும் நீங்கள்
மகா வித்தியாலயத்தின் மகேஸ்வரியாய்
தாரான மனதில் தனேஸ்வரியாய்
தங்க குணம் படைத்தவராய்
எல்லோர் மனதிலும் நிறைந்த உங்கள்
ஓய்வுக்காலம் ஒப்பற்றதாய் அமைய
வாழி என வாழ்த்துகின்றோம்.

19.09.2021



சேவைக்காலம்

06.05.1989 - 04.05.2002 மடு / பண்டாரவளை தமிழ் மகா வித்தியாலயம்
05.05.2002 - 05.01.2016 கிளி / கோணாவில் மகா வித்தியாலயம்
06.01.2016 - 18.09.2021 கிளி / கிளிநொச்சி மகா வித்தியாலயம்

நாட்டின் வேர்களை உருவாக்கும் அரும்பணியான தனது ஆசிரியப் பணியை சிறப்புற ஆற்றிய ஆசிரியைக்கு
இம்மணிவிழா நாளில் ஓய்வுக்காலம் மகிழ்ச்சிகரமாக அமைய மனம் திறந்து வாழ்த்துவதில் நிறைவடைகின்றோம்.

வாழ்த்துவோர் : ஆசிரியர் ஊழியர் நலன்புரிச் சங்கம்
கிளி / கிளிநொச்சி மகா வித்தியாலயம்

# இராசிபலன்

**19.09.2021**
**புரட்டாதி 03, ஞாயிற்றுக்கிழமை**
**திரயோதசி காலை 6.43 மணிவரை**
**சதயம் பின்னிரவு 4.51 மணிவரை**
**சுபநேரம் -9.03 - 10.33 மணிவரை**
**இராகு காலம் -4.33-6.03 மணிவரை**
**சந்திராஷ்டமம்- பூசம்**
**வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா தினம்வளவன்**

| | |
|---|---|
| மேஷம் | குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம். |
| ரிஷபம் | சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும். |
| மிதுனம் | பகை விலகி பாசம் கூடும் நாள், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம். |
| கடகம் | நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள். |
| சிம்மம் | குடும்பத்தினரிடையே குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பயணங்களால் பலனுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான நாள். |
| கன்னி | செய் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், இளைத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு. |
| துலாம் | புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள். |
| விருச்சிகம் | சந்தித்த நபர்களால் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும். |
| தனுசு | பாகப் பிரிவினைகள் சுமூகமாக அமையும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு. |
| மகரம் | பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும். |
| கும்பம் | இறைவழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், சான்றோர்களின் சந்திப்புண்டு. |
| மீனம் | உறவினர்களின் அன்புக்கு பாத்திரமாவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையும், பயணங்கள் கைகூடும். |

அறிவு தலைவனாகவும், உணர்வு தொண்டனாகவும் இருக்க வேண்டும்.

# இதுவரை 12 பேருக்கு கறுப்பு பூஞ்சை தொற்று

(கொழும்பு)

நாட்டில் கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்களில் இதுவரையில் 12 பேருக்கு கறுப்பு பூஞ்சை தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

எனினும் கொவிட் தொற்றுக்கு உள்ளாகாதோரில் இந் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இதனை விட அதிகமாகக் காணப்படும் என்று மருத்துவ ஆய்வு கூடத்தின் விசேட வைத்திய நிபுணர் பிரிமாலி ஜயசேகர தெரிவித்தார்.

நாட்பட்ட நோயால் பாதிக்கப்பட்டு நோய் எதிர்ப்பு சக்தி மிகக் குறைவாகக் காணப்படும் சிறுவர்களுக்கு இந்த நோய் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

எனவே அவர்களை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும் என்றும் விசேட வைத்திய நிபுணர் பிரிமாலி ஜயசேகர சுட்டிக்காட்டினார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

மேற்கூறப்பட்ட 12 என்ற எண்ணிக்கை இரசாயன கூடங்களில் உறுதி செய்யப்பட்ட தொகை மாத்திரமேயாகும். எனவே இந்த எண்ணிக்கையில் மிகக் கனிசமானளவு அதிகரிப்பு காணப்படலாம்.

அத்தோடு இதுவரையில் சிறுவர்கள் இந்த நோயால் பாதிக்கப்படவில்லை. எனினும் நாட்பட்ட நோயால் பாதிக்கப்பட்டு நோய் எதிர்ப்பு சக்தி மிகக் குறைவாகக் காணப்படும் சிறுவர்களுக்கு இந்த நோய் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. எனவே அவர்களை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டியது பெற்றோரின் கடமையாகும்.

மருத்துவர்களின் ஆலோசனை இன்றி மேற்கத்தேய மருந்துகள் உபயோகிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்தியாவில் அண்மையில் கொவிட் தொற்றாளர்களுக்கு மத்தியில் கறுப்பு பூஞ்சை நோய் பரவல் அதிகமாகக் காணப்பட்டமைக்கான பிரதான காரணம் மேற்கத்தேய மருந்துகள் அதிகளவில் உபயோகிக்கப்பட்டமையாகும் என்பது தெரியவந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-4)



ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தின் மூலம் சீனாவில் இருந்து எடுத்து வரப்பட்ட 4 மில்லியன் சினோபார்ம் தடுப்பூசிகள் நேற்று அதிகாலை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

## தனியார் பேருந்து உரிமையாளர்கள், பணியாளர்களுக்கு
# விசேட நிவாரணம் வழங்கத் தீர்மானம்

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் காரணமாக பாதிக்கப்பட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு விசேட நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதுதொடர்பாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவிக்கையில், தற்சமயம் மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்து போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

இதனால் தனியார் பேருந்து 'உரிமையாளர்கள் மாத்திரமன்றி பணியாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதனைக் கருத்திற் கொண்டு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# கற்றலுக்கான சூழலை ஏற்படுத்திய பின் பரீட்சைகளை நடத்துங்கள்

## இலங்கை அரசாங்க ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(மட்டக்களப்பு)

அரசாங்கம் மாணவர்கள் கற்பதற்கான உரிய சூழலை ஏற்பத்திய பின்னரே க.பொ.த. உயர்தரப்பரீட்சை மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றினை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இலங்கை அரசாங்க ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய இலங்கை அரசாங்க ஆசிரியர் சங்கத்தின் வடக்கு- கிழக்கு மாகாணங்களின் செயலாளர் ஜீவராஜா ருபேஷன் இவ்வாறு அரசாங்கத்திடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளதாவது, " ஆசிரியர் சங்கத்தின் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கின்ற நிலையில், க.பொ.த உயர்தரப் பரீட்சை மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்கின்றது.

மேலும் தற்போதுள்ள சூழ்நிலையில் கல்வியினை நாற்பது வீதமான மாணவர்களே பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். ஏனைய அறுபது வீதமான மாணவர்களுக்கு இது கிடைக்கவில்லை.

இவ்வாறான நிலையில் இந்த மாணவர்களுக்கு பரீட்சைக்குத் தயாராகுவதற்குரிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்காமல், அரசங்கமானது பரீட்சைகளை நடத்துவதற்கு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றது.

சரியான திட்டத்தினை நடைமுறைப்படுத்தி மாணவர்கள் பரீட்சைக்கு தயார்படுத்தி, அவர்கள் பரீட்சை எழுதுவதற்கு ஏற்ற சூழல் சரியான முறையில் கிடைத்த பின்னரே, இந்த பரீட்சைகளை நடத்த வேண்டும் என்கின்ற கோரிக்கையினை நாங்கள் இந்த அரசாங்கத்திடம் முன்வைக்கின்றோம்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# ஊரடங்கை மீறுவோருக்கு அன்டிஜன் சோதனை

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் நேற்று முதல் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறி வீதியில் பயணிப்பவர்கள் அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப் படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**



பொலிஸார் மற்றும் சுகாதாரத் துறையினர் இணைந்து இந்த நடவடிக்கையை நேற்று கொக்குவில் கே.கே.எஸ் வீதியில் குளப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் ஆரம்பித்தனர்.

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு வரும் ஒக்டோபர் முதலாம் திகதிவரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் வீதியில் பொதுமக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கை மீறி தேவையற்று நடமாடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி பணித்திருந்தார்.

இந்த நிலையில் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட்டவர்கள் தவிர்ந்து வீதிகளில் நடமாடுபவர்களுக்கு அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையை முன்னெடுக்கும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டது. (4-7-18-33)

# சுவரொட்டிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உலக மார்பக புற்றுநோய் விழிப்புணர்வுமாதத்தை முன்னிட்டு வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் இளைஞர் விவகார அலகு வடக்கு மாகாணத்திற்குட்பட்ட 19-40 வயதிற்குட்பட்ட இளைஞர் யுவதிகளுக்கான சுவரொட்டி ஏற்பாடு செய்துள்ளது.

"விழிப்புணர்வாழ் புற்றுநோயில் இருந்து தேசத்தைக் காப்போம்" என்னும் தொனிப் பொருளில் (ஓவியம் மட்டும்) Bristol board, kent paper/ வேறு பொருத்தமான வரைத் தாள்களைப் பயன்படுத்தி அகலம் 12-22.5 அங்குலம் , நீளம் 18-28.5 அங்குலம் ஆகிய அளவுத்திட்டத்திற்கு அமைய நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், பஸ்ரல் (சோக்) ஆகிய வர்ணங்கள் பயன்படுத்தி உருவாக்கப்பட்டதாக அமைய வேண்டும்.

இப்போட்டிக்கான விண்ணப்பப்படிவத்தை edumin.np.gov.lk எனும் இணையத் தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

சுவரொட்டியின் பின்புறத்தில் "சுயபடைப்பொன்றாகும்" எனக் குறிப்பிட்டு பெயர், தே.அ.அ.இல, வயது, முகவரி, தொ.இ, மின்னஞ்சல் முகவரி என்பன குறிப் பிடப்பட வேண்டும்.

இப்போட்டிக்கான முடிவுத் திகதி ஊரடங்கு தளர்த்தப்படும் இறுதித்திகதியில் இருந்து 15 ஆவது நாளாகும்.

ஆக்கம் அனுப்பும் போது கடித உறையின் மேல் மூலையில் "புற்றுநோய் சுவரொட்டிப் போட்டி -2021" எனக்குறிப்பிட்டு அதனுடன் விண்ணப்பப்படி வத்தைச் சேர்த்து செயலாளர் கல்விஅமைச்சு, வ.மா.செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

போட்டி முடிவுகளைத் தினசரிப் பத்திரிகைகள், edumin.np.gov.lk எனும் இணையத்திலும் வெளிவிடப்படும். மேலதிக விபரங்களுக்கு 071 978 5994 எனும் தொ. இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் எனவும் ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (4-7)

# குறும்படப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உலக மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் இளைஞர் விவகார அலகு வடக்கு மாகாணத்திற்குட்பட்ட 19-40 வயதிற்குட்பட்ட இளைஞர் யுவதிகளுக்கான குறும்படப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளது.

"விழிப்புணர்வால் புற்றுநோயிலிருந்து தேசத்தைக் காப்போம்" எனும் தொனிப் பொருளில் 5 இற்கும் மேற்படாத கதாபாத்திரங்களுடன் 5-10 நிமிடங்களுக்குட்பட்ட பதிப்புரிமம் அற்ற பின்னணி இசையுடன் உருவான குறும்படமாக இருத்தல் வேண்டும்.

இப்போட்டிக்கான விண்ணப்பங்களை edumin. np. gov.lk எனும் இணையத் தளத்தில் பெறமுடியும்.

இப்போட்டிக்கான முடிவுத் திகதி ஊரடங்கு தளர்த்தப்படும் திகதியில் இருந்து 15ஆவது நாள் ஆகும்.

இவ்வாக்கம் அனுப்பும் போது கடித உறையின் மேல் மூலையில் "புற்றுநோய் விழிப்புணர்வு குறும்படப்போட்டி - 2021" எனக்குறிப்பிட்டு விண்ணப்பப்படிவத்தை சேர்த்து நேரடியாகவே அல்லது தபால் மூலமோ செயலாளர் கல்வி அமைச்சு, வ.மா.செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

போட்டி முடிவுகள் தினசரி பத்திரிகைகள் அல்லது edumin.np.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

வெற்றியீட்டிய குறும்படம் youtube தளத்தில் பதிவேற்றப்படும் மேலதிக விபரங்களுக்கு 071 978 5994 எனும் தொ.இலக்கத்துடன் தொடர்பு கொள்ளு மாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (4-7)

# வாகன இலக்க தகடுகளை பெற்றுக் கொள்ளவும்

## மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலிருந்து 2021.08.09 ஆம் திகதி யாழ்.மாவட்ட அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத் தகடுகளின் பட்டியல், யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டச்செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

இதற்கமைய புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (Sticker) என்பவற்றையும் யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# மூன்று வாள்கள் மீட்பு

(அராலி)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடுவில் கிழக்குப் பகுதியிலுள்ள தோட்டக்காணியொன்றில் இருந்து 3 வாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

தாக்குதல் ஒன்றுக்கு தயாராக இருப்பதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையிலேயே குறித்த ஆயுதங்கள் நேற்றுக்காலை மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட வாள்கள் சுன்னாகம் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.(4-7-104)

# மோட்டார் குண்டு மீட்பு

(அராலி)

யாழ். திருநகர் பகுதியில் நேற்றைய தினம் சனிக்கிழமை மோட்டார் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது யாழ். திருநகர் பகுதியில் உள்ள விளையாட்டு மைதான காணியை துப்பரவு செய்ய ஆரம்பித்தபோது குறித்த குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

யுத்தகாலத்தில் கைவிடப்பட்ட மோட்டார் குண்டே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-7-104)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சித்தங்கேணி பெரியவளவு ஸ்ரீ மகா கணபதிபிள்ளையார் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவ ஸ்ரீ மதுசூஷணக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-7-6)



ரொரண்டோ கனடா நேயம் பவுண்டேஷன் நிறுவனத்தின் ஐந்து இலட்சம் ரூபாய் நிதியில் உடுவில் மற்றும் தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் நலன்புரி நிலையங்களில் வாழும் 200 குடும்களுக்கு தலா 2000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்களும் 500 ரூபாய் பணமும் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

## சேவை

வெள்ளவத்தை, தெகிவளை போன்ற பகுதிகளில் உங்கள் முதியவர்களை பராமரிப்பதற்கு எங்களிடம் தொடர்பு கொள்ளவும். மற்றும் கிளீனிங் சேவைக்கும் எங்களிடம் திறமையுள்ளவர்கள் உண்டு. அத்துடன் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ள முடியும்.

**074 055 5922** (C-1487)



## வேலைக்கு ஆட்கள் தேவை

வயதானவர்களை பராமரித்தல் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. கொழும்பு, யாழ்ப்பாணம் போன்றபகுதிகளுக்கு அனுபவமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**074 055 5922** (C-1488)


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர் மாற்றம்
## 27, குளிப்பன் வீதி, வட்டாரம்-02

வலிகாமம் மேற்கு பிரதேசசபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-02 குளிப்பன் வீதியிலுள்ள இல:27 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் அப்புத்துரை இரத்தினசிங்கம் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **அம்பலவாணர் பொன்னையா மகள் திலகவதி** ஆகியவர் அவ்வூர் அப்புத்துரை இரத்தினசிங்கம் என்பவருக்கு மணம்முடிக்க நிச்சயித்திருப்பதாக வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ம.கதிரவேலு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4234/28.03.1957ம் இலக்க உறுதியால் **அம்பலவாணர் பொன்னையா பெண் சிவபாக்கியமும் முருகேசர் சுப்பையா கைம்பெண் சின்னாச்சிப்பிள்ளையும்** ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**கனககுலசிங்கம் விவேகானந்தன் பெண் ஜெயகுமாரி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு க.துரைரத்தினம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1726/24.05.1982 ஆம் இலக்க உறுதியால் **கார்த்திகேசு பூபாலசிங்கமும் பெண் சாவித்திரிதேவியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் குறித்த 4234ம் இலக்க உறுதியே அடியுறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கனககுலசிங்கம் விவேகானந்தன் பெண் ஜெயகுமாரி** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **கனககுலசிங்கம் விவேகானந்தன் பெண் ஜெயகுமாரி** ஆகியவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/ செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.**

(7923)

# தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள மாணவர்களை தயார் செய்யவும்

## பெற்றோருக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

பாடசாலை செல்லும் மாணவர்களை தடுப்பூசிபெற்றுக்கொள்ள தயார்படுத்துமாறு சுகாதார அமைச்சு பெற்றோருக்கு அறிவித்துள்ளது.

குறிப்பாக தடுப்பூசியை செலுத்துவதற்கான காலக்கெடு இறுதி செய்யப்படாத நிலையில் இந்த அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் முறையான உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை தொடங்காது என வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அதற்குரிய திகதிகள் மற்றும் இடங்கள் எதிர்காலத்தில் அறிவிக்கப்படும் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை 15 முதல் 19 வயதுக்கு உட்பட்ட மற்றும் 12 வயதுக்கு மேற்பட்ட குறைபாடுகள் உள்ள சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசியை வழங்க ஜனாதிபதி நேற்று பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

### 20 ரயில் பெட்டிகள் நாட்டை வந்தடைந்தன

(கொழும்பு)

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 20 ரயில் பெட்டிகள் கொழும்பு துறைமுகத்தைவந்தடைந்துள்ளன. இதன் மூலம் போக்குவரத்து துறையில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஒத்துழைப்பு தொடர்கிறது என்று கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் தனது பேஸ்புக் பக்கத்தில் தெரிவித்துள்ளது. (நி-4)

# கண்ணீர் அஞ்சலி

அமரர்.திரு. **சரவணை முத்துலிங்கம்**



எமது பாடசாலை ஆசிரியை செல்வி மு.றனிதயாமினி அவர்களின் தந்தையார் **திரு. சரவணை முத்துலிங்கம்** அவர்கள் 17.09.2021 அன்று இறைபதமடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
**யா/ செட்டித்தெரு மெ.மி.த.க.பாடசாலை,**
**யாழ்ப்பாணம்.**

(C 2670)

# 10ஆம் ஆண்டு நீங்கா நினைவில் உங்களுடன்



தோற்றம் 30 ❖ 06 ❖ 1951

மறைவு 11 ❖ 10 ❖ 2011

அமரர்.திருமதி. **வரதலஷ்மி புஸ்பராஜா**

எமக்கு உதயம் தந்த எம் நிலவே
ஏற்றம் பெற வாழ வைத்து
பிறந்த பலனை நாம் பெற வைத்து
நீங்கா உறக்கத்தில் நீ சென்று
10 ஆண்டுகள் என்ன பல்லாயிரம் ஆண்டுகள்
கடந்தாலும் உன் பாசவலையில்
சிக்குண்டு தவிப்பதுதான் தீருமா?

(7926)

உங்கள் நினைவுகளுடன் வாழும்
**கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**


UNIVOTEC

# University College of Jaffna
### University of Vocational Technology
State Ministry of Skills Development, Vocational Education, Research & Innovations

## Applications are open for the following Courses

- Construction Technology
- Building Services Technology
- Mechatronics Technology
- Production Technology
- Farm Machinery Technology
- Food Technology
- Hospitality Management
- Cosmetology ( Beauty Culture )

Closing Date 15th October 2021

Accreditation QMS TVEC Approved Registration

**Entry Qualifications**
GCE A/L qualified or NVQ 4

Career Path : A/L or NVQ 4 → University College: NVQ 5/ Diploma → NVQ 6/ HND → UNIVOTEC NVQ 7/ Degree

For more details
University College of Jaffna
29, Brown Road,
Kokuvil,
Jaffna.

Visit our website: www.ucj.ac.lk
E-mail: info@ucj.ac.lk
Telephone: 021-221-7791 or 021-221-7792

Application forms can be dowloaded from the website

Please pay the application Fee Rs. 500 to this account no (Peoples Bank 162 - 100100045947) and attach the bank receipt with application

(C-2659)

## ஆப்கானிஸ்தானில் போதிய உணவு இன்றி
# 1 கோடி குழந்தைகள் தவிப்பு

(காபூல்)

**ஆப்கானிஸ்தானில் போதிய உணவு, மருந்து, குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் கிடைக்காமல் 1 கோடி குழந்தைகள் தவித்து வருகின்றனர்.**



ஆப்கானிஸ்தானில் அரசுக்கு எதிரான போரில் ஆட்சி அதிகாரம் தலிபான்கள் அமைப்பிடம் சென்றுள்ளது. இந்த நிலையில், ஆப்கானிஸ்தானில் போதிய உணவு, மருந்து, குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளின்றி 5 வயதுக்கு உட்பட்ட 1 கோடி குழந்தைகள் தவித்து வருகின்றனர் என யுனிசெப் அமைப்பு அதிர்ச்சி தெரிவித்து உள்ளது.

இதுபற்றி அந்நாட்டுக்கான யுனிசெப் அமைப்பின் தலைமை தொடர்பு அதிகாரி சாம் மோர்ட் கூறும்போது, அடிப்படை வசதிகள் போதிய அளவில் கிடைக்காத சூழலில் பல குழந்தைகள் ஊட்டச்சத்து இன்றி மருத்துவமனை படுக்கைகளில் இருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

அவர்களுக்கு மனிதநேய உதவி அளிக்க வேண்டிய அவசர தேவை உள்ளது. வறட்சியால் குடிநீர் கிடைக்காமலும் உள்ளனர் என கூறியுள்ளார்.

கடந்த மாதத்தில் ஊட்டச்சத்து பற்றாக்குறையுடன் கூடிய குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது என்று எண்ணற்ற மருத்துவர்கள் கூறிவருகின்றனர். (7-4)

# ஆப்கான் சொத்து முடக்கத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்

## உலக நாடுகளிடம் புடின் வலியுறுத்து

(காபூல்)

ஆப்கானிஸ்தான் சொத்துகள் முடக்கத்தை உலக நாடுகள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் வலியுறுத்தியுள்ளார்.

21ஆவது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் கூட்டத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், 'ஆப்கானிஸ்தான் சொத்துகள் முடக்கத்தை உலக நாடுகள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். ஐக்கிய நாடுகள் சபை, ஆப்கானிஸ்தான் நிலவரம் குறித்து சர்வதேச மாநாட்டை ஒருங்கிணைக்க வேண்டும். தலிபான்களுடன் செயற்படுவது குறித்து ரஷ்யாவும் பரிசீலித்து வருகிறது' என்று கூறினார். இதேபோல, ஆப்கானிஸ்தானில் சுமுகமான ஆட்சிமாற்றம் நடைபெறுவதற்கு ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்சிஓ) உறுப்பு நாடுகள் உதவ வேண்டும் என்று சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் கேட்டுக் கொண்டுள்ளார்.

73பேர் கொண்ட தலிபான் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள பலரும் ஐ.நா வால் தேடப்படும் பயங்கரவாதியாக அடையாளப்படுத்தப்பட்டவர்கள். இதனாலேயே உலக நாடுகள் தலிபானுடன் நட்பு பாராட்ட தயக்கம் காட்டிவருகிறமை குறிப்பிடத்தக்கது. (7-4)

# வான்வெளித் தாக்குதல் மன்னிப்புக் கோரியது அமெரிக்கா

(காபூல்)

தலிபான்களின் தற்கொலைத் தாக்குதலுக்கு பதிலடியாக கடந்த 29 ஆம் திகதி காபூல் விமான நிலையம் அருகே அமெரிக்கா 'டிரோன்' மூலம் வான்வெளி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் காபூல் விமான நிலைய தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்ட பயங்கரவாதிகள் உட்பட 10 பேர் உயிரிழந்ததாக அமெரிக்கா தெரிவித்தது.

ஆனால், காபூல் விமான நிலையம் அருகே அமெரிக்கா நடத்திய தாக்குதலில் 7 குழந்தைகள் உட்பட அப்பாவி பொதுமக்கள் 10 பேர் உயிரிழந்ததாக ஆப்கானிஸ்தான் உள்ளூர்வாசிகள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், காபூல் விமான நிலையம் அருகே நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்த 10 பேரும் அப்பாவி பொதுமக்கள் என அமெரிக்கா முதல் முறையாக ஒப்புக்கொண்டுள்ளது. மேலும், பயங்கரவாதிகள் என நினைத்து பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு விட்டதாகவும், இது தவறு என அமெரிக்கா தெரிவித்துள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அமெரிக்கா இரங்கல் தெரிவித்துள்ளது.

7 குழந்தைகள் உட்பட 10 ஆப்கானியர்கள் மீது நடத்தப்பட்ட இந்த தவறான தாக்குதலுக்கு அமெரிக்க பாதுகாப்புத்துறை மந்திரி லாயிட் அகஸ்டின் மன்னிப்புக் கோரியுள்ளார். (7-4)

# தடுப்பூசி வழங்குவதில் இந்தியா முதலிடம்

(டில்லி)

உலகின் 18 முக்கிய நாடுகளின் சராசரியாக தினசரி கொவிட் -19 தடுப்புசி வழங்குவதில் இந்தியா முதல் நிலையில் உள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் அறிவித்துள்ளது.

அமைச்சகத்தின் தகவல்களின்படி , 18 முக்கிய நாடுகள் 8.17 மில்லியன் கொவிட் -19 தடுப்புசிகளை வழங்கியுள்ளன. இந்தியா 8.54 மில்லியன் கொவிட் -19 தடுப்புசியை வழங்கியுள்ளன.

முக்கிய நாடுகளின் பட்டியலில் ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா மற்றும் ரஷ்யா ஆகியவை உள்ளடங்குகின்றன. மேலும் இந்தியாவில் 30,570 புதிய கொவிட் -19 தொற்றாளர்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4)

# இங்கிலாந்து இளவரசர் பிலிப்பின் உயில் 90 ஆண்டுகள் சீல் வைக்க உத்தரவு

(லண்டன்)

இங்கிலாந்து இளவரசர் பிலிப் எழுதிய உயிலை 90 ஆண்டுகள் "சீல்" வைத்து பாதுகாக்க வேண்டும் என லண்டன் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளது.



இதன்படி அவரது உயிலில் உள்ள விபரங்களை வெளிப்படுத்தாமல் இருக்க, அதை 90 ஆண்டுகள் "சீல்" வைத்து பாதுகாக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

மறைந்த இளவரசர் பிலிப், அவரது மனைவி இரண்டாம் எலிசபெத்தின் கௌரவத்திற்காக தன் உயில் ரகசியம் பாதுகாக்கப்பட வேண்டும் என விருப்பம் தெரிவித்துள்ளார். இறையாண்மை மற்றும் அவரது குடும்பத்தினர் மற்றும் நெருங்கியவர்களின் கௌரவத்தை பாதுகாக்க, தனி நபர்களின் தனிப்பட்ட ரகசியங்களுக்கான பாதுகாப்பு அவசியமாக உள்ளது. எனவே இளவரசர் பிலிப்பின் உயிலை 90 ஆண்டுகளுக்கு சீல் வைக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் உயிலின் நகலை பதிவு செய்யவோ, கோர்ட்டில் தாக்கல் செய்யவோ கூடாது என அதில் கூறப்பட்டு உள்ளது. (7-4)

# அல்ஜீரியா ஜனாதிபதி பூடேஃப்லிகா காலமானார்



(அல்ஜியர்ஸ்)

அல்ஜீரியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்தெலாசிஸ் புடிடஃப்லிகா தனது 84 ஆவது வயதில் காலமானார்.

ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக அல்ஜீரிய அரசியலில் ஒரு முக்கிய நபராக இருந்த அப்தெலாசிஸ் புட்டெஃப்லிகா, 1999 - 2019 வரை அல்ஜீரியாவின் நீண்டகால ஜனாதிபதியாக பணியாற்றினார்.

அல்ஜீரியாவின் சுதந்திரப் போரின் சிரேஷ்ட வீரரான புடிடஃப்லிகா, 2019 ஏப்ரலில் இராஜினாமா செய்வதற்கு முன்பு இரண்டு தசாப்தங்களாக வட ஆபிரிக்க நாட்டை ஆட்சி செய்தார்.

அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களைக் கோரும் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான புடிடஃப்லிகா 2019 இல் இராஜினாமா செய்தமை குறிப்பிடத்தக்கது.(7-4)



**மனமே வெறுத்துப் போச்சு வியாசரே. இந்த உலகத்தில் வாழுறது வேஸ்ட் என எண்ணத் தோன்றுகிறதே?**






**ஐ.நா. விடயம். எப்படி இருக்கப் போகிறது இலங்கையின் நிலை?**

**கேதீஸ் — தெல்லிப்பழை**

**அரசியல் கைதிகளை முழந்தாளிடச் செய்து துப்பாக்கி காட்டி மிரட்டியது பற்றி?**

இது பெரும்பான்மை ஆட்சி செய்யும் நாடு. இங்கு சிறுபான்மையினரை என்னவும் செய்யலாம் என்ற உண்மையை மீண்டும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

மிரட்டல் கதை வெளியே கசிந்ததும் பதவியை இராஜினாமாச் செய்ததுடன் கதை முடிந்து விட்டது.

அதைவிட குறித்த அமைச்சருக்கு வேறு எந்த விளக்கம், விசாரணையும் இல்லை.

அட அவர் பெரும்பான்மை இனத்தவர். அவர் வெருட்டியது சிறுபான்மை இனத்தவர்களை.

இதில் என்ன இருக்கிறது. அவர்கள் ஆட்சியாளர்கள். அவர்கள் எதுவும் செய்யலாம். சிறுபான்மையினர் பொத்திக் கொண்டு இருக்க வேண்டும் என்ன புரிகிறதா?

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**ஐ.நா. விடயம். எப்படி இருக்கப் போகிறது இலங்கையின் நிலை?**

சர்வதேசத்தினூடே தமிழரின் பிரச்சினை தீரும் என்று நீங்கள் நினைப்பீர்கள் என்றால் அந்த நினைப்பை தூக்கி குப்பையில் போடுங்கள்.

தமிழினம் கொத்துக் கொத்தாய் இறந்தபோது வாய்மூடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சர்வதேசம், எல்லாம் முடிந்த பின்னர் என்னத்தைச் செய்துவிடப் போகிறது.

இந்தத் தீர்மானம் கால அவகாசம் எல்லாம் வெறும் கண்துடைப்பு ஐயா. இந்த மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கத் தயாராகி விட்டீங்களோ?

**ராஜ் — யாழ்ப்பாணம்**

**மனமே வெறுத்துப் போச்சு வியாசரே. இந்த உலகத்தில் வாழுறது வேஸ்ட் என எண்ணத் தோன்றுகிறதே?**

இந்த உலகில் எதுவும் பிரயோசனம் அற்றது என்று இல்லை ராஜ்.

தேய்ந்து விட்டது. இனிப் பாவிக்க முடியாது எனத் தூக்கி எறியும் கிழிந்த டயர்கள் தான். டயர்கடைக்கே அடையாளம் ஆகின்றன.

இந்த ஒரு விடயமே போதும் நாம் வாழ்வில் முன்னேறுவதற்கு. இங்கு எதுவும் பிரயோசனம் அற்றது என்றில்லை.

எல்லாம் எம் மனம் சார்ந்த விடயமே.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**021 567 1532**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**இந்துமா — மானிப்பாய்**

**கொரோனா நேரத்தில் பொழுது போக்கிற்கு ஏதாவது செய்யலாம் என நினைக்கிறேன் வியாசரே. ஐடியா பிளீஸ்.**

அண்மையில் ஒரு நண்பரைச் சந்தித்தேன். மிகவும் சோர்வாக இருந்தார். என்ன ஏதென விசாரித்தேன்.

மன அழுத்தமாக இருக்கிறது. மனநிம்மதிக்காக மீன் வாங்கித் தொட்டியில் வளர்த்தேன்.

இப்போது மீன் தொட்டிலைக் கழுவுவதை நினைக்க அதைவிட அதிக மன அழுத்தமாக இருக்கிறது என்றார்.

ஏன் தேவையில்லாத வேலையைப் பார்க்க வேண்டும். எதிர்வரும் 1 ஆம் திகதியுடன் ஊரடங்கு தளர்கிறது. அதுவரை பொறுத்திருக்க. (அதுசரி இப்போது ஊரடங்கு அமுலிலா இருக்கு. டவுட்டு

**சிவன் — வடமராட்சி**

**சூம் வகுப்புக்கள் பிள்ளைகளையும் பெற்றோரையும் துவம்சம் செய்கிறதே வியாசரே?**

**அந்தக் காலம், அம்மா பிள்ளையிடம்:** அரை மணிநேரம் தான் தொலைபேசியைத் தரு வேன். கேம் விளையாடிட்டு புத்தகம் படிக்க வேண்டும் சரியா?

**இந்தக் காலம், பிள்ளை அம்மாவிடம்:** பத்து நிமிடம்தான் போன் பேசிட்டு போனைக் கொடு த்திடணும். எனக்கு சூம் கிளாஸ் இருக்கு. ஒன்லைன் கிளாஸ் பரிதாபங்கள்.

**தாரு — வதிரி**

**என்ன வியாசரே கொரோனாவால் உன் கதை முடிந்து விட்டது போல?**

இல்லையடா தம்பி. கொரோனா நேரம் வேலை ஏதும் இல்லை. புது பிஸ்னஸ் ஏதும் செய்வம் எண்டு ஒரு ஐடியா வந்தது.

அதுதான் வீட்டோட மரக்கறிக் கடை போட்டன்.

மரக்கறி பிஸ்னஸ் சும்மா பிச்சுக் கொண்டு போச்சுது. அதால கொஞ்சநாள் இந்தக் கேள்வி பதில் எழுதிறதை தள்ளிவச்சுட்டன்.

இப்ப பிசினஸ மனிசி பார்க்கிறா. நான் மறுபடியும் வந்திட்டன்டா தம்பி.

**சுதன் — குப்பிழான்**

**அரசாங்கத்தைக் கூட்டமைப்பு காப்பாற்றும் போல உள்ளதே?**

தமிழினத்திற்கு ஒரு நல்ல தலைமை இல்லை என்பதை மீண்டும் பறைசாற்றியிருக்கிறது தற்போதைய ஐ.நா. விடயம்.

சிறுபிள்ளைகள் "ரீச்சர்கிள்ளிப்போட்டா, ரீச்சர் நுள்ளிப் போட்டா'' என்பது போல ஆனாளுக்கு கடிதம் அனுப்பினம் என்றும் கடிதம் அனுப்பவில்லை என்றும் மாறி மாறிக் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லாம் தமிழினத்தின் தலை எழுத்து.

ஒரு நல்ல தலைமைக்காய் தமிழினம் காத்திருக்கிறது. அந்த மீட்பர் எங்கிருக்கிறாரோ யாருக்குத் தெரியும்?

**பதிதன் — சாவகச்சேரி**

**கொரோனாவுக்கு முடிவு இருக்கா வியாசரே?**

என்னது கொரோனாவுக்கு முடிவு இருக்கா?

அடே பக்கிப் பயலுகளே இதைச் சத்தமா சொல்லிப் போடாதீங்கடா.

அது கொரோனா காதில விழுந்திடப் போகுது.

இப்பதான் கொஞ்சம் தணிஞ்சிருக்கு. மீண்டும் கிளப்பி விட்டுடாதீங்கடா.

பேசாமல் வீட்டுக்குள்ளேயே இருந்திட்டா போச்சு.

அது தானா வந்த பாதையைப் பார்த்து சீனா பக்கம் போயிடும்டா.

# ஒரு புதிய உண்மைக்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்

**பேரிடர்களை முன்கூட்டியே கணித்துவிடும் அறிவியல் தொழில் நுட்பங்களாலும்கூட அவற்றைக் கணிக்க முடியவில்லை. இன்னும் சில ஆண்டுகளில் காலநிலையில் குறிப்பிட்ட அளவு மாற்றம் நிகழும் என்று ஏற்கெனவே நாம் கணித்திருந்த பல அளவுகோல்களைச் சுக்கு நூறாக உடைத்தன ஜூலை மாதத்தில் நடந்த தீவிர காலநிலை நிகழ்வுகள்.**

மூன்றாண்டுகளுக்கு முன்பு, மாஸ்க் அணிந்து வேர்க் ப்ரொம் ஹோம் செய்ய வேண்டியிருக்கும் என்று ஒருவரும் நினைத்திருக்க மாட்டோம். கொரோனாவுக்கு முன்/ கொரோனாவுக்குப் பின் என்று மனிதனின் வாழ்க்கையைப் பிரிக்கும் அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது கொரோனா.

இது ஏதோ சாபமோ... கைமீறிய விபரீதமோ கிடையாது. இயற்கையின் எண்ணற்ற எச்சரிக்கைகளைக் காற்றில் பறக்கவிட்டு, உள்ளங்கைக்குள் வைத்து கொரோனாவை வளர்த்திருக்கிறோம். கொரோனா, காலநிலை மாற்றத்தின் குழந்தை. காடுகள் அழிக்கப்படுவதும், அதனால் காட்டுயிர்களின் வாழ்விடங்கள்சுருங்குவதுமேகொரோனா போன்ற தொற்றுகளுக்குக் காரணம் என்கிறார்கள் நுண்ணுயிர் ஆய்வாளர்கள்.

சமீபத்தில் வெளியான காலநிலை மாற்றத்துக்கான பன்னாட்டு அரசுகளின் அமைப்பான ஐ.பி.சி.சி-யின் அறிக்கை, நாம் கண்டுகொள்ள மறுத்த எச்சரிக்கை, இன்று எப்படி நமக்கு மிகப்பெரிய சவாலாக மாறியிருக்கிறது என்பதை விரிவாகச் சொல்கிறது.

கடந்த ஜூலை மாதம் உலகின் அனைத்துப் பிராந்தியங்களும் வெள்ளம், வறட்சி, புயல், நிலச்சரிவு, கடல் நீர்மட்ட உயர்வு, கனமழை, காட்டுத்தீ என ஏதோவொரு பேரிடரால் பாதிக்கப்பட்டிருந்தன அல்லது பாதிப்பிலிருந்து மீண்டுகொண்டிருந்தன. வெறும் ஹேஷ்டேக்குகளாகவே நாம் கடந்து சென்ற இந்த நிகழ்வுகளை, இனி அப்படிக் கடக்க முடியாது. காரணம், காலநிலை மாற்றத்தின் கொடும் கரங்கள் நம் வாசலை நோக்கி நீண்டு கொண்டிருக்கின்றன.

கடந்த ஜூலை மாத நிகழ்வுகளெல்லாம் சில ஆண்டுகளாக நடந்து கொண்டிருப்பவைதானே... அதில் புதிதாக ஏதுமில்லையே என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், ஜேர்மனியிலும் பெல்ஜியத்திலும் ஏற்பட்ட கனமழை மற்றும் அதனால் ஏற்பட்ட வெள்ள பாதிப்பை காலநிலை மாற்றம் குறித்து தொடர்ச்சியாக கண்காணித்து வரும் எந்த அறிவியலாளராலும் கணித்திருக்க முடியவில்லை.

பேரிடர்களை முன்கூட்டியே கணித்து விடும் அறிவியல் தொழில் நுட்பங்களாலும்கூட அவற்றை கணிக்க முடியவில்லை. இன்னும் சில ஆண்டுகளில் காலநிலையில் குறிப்பிட்ட அளவு மாற்றம் நிகழும் என்று ஏற்கனவே நாம் கணித்திருந்த பல அளவுகோல் களைச் சுக்கு நூறாக உடைத்தன ஜூலை மாதத்தில் நடந்த தீவிர காலநிலை நிகழ்வுகள்.



இந்தப் பின்னணியில்தான் ஐ.பி.சி.சி-யின் சமீபத்திய அறிக்கையைப் பொருத்திப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஐ.பி.சி.சி தற்போது தனது ஆறாவது மதிப்பீட்டுக் காலத்தில் உள்ளது. இந்தக் காலத்தில் அமைப்பின் முதல் பணிக்குழுவின் **'Climate Change 2021: The Physical Science Basis'** எனப் பெயரிடப்பட்ட இந்த அறிக்கை, காலநிலை மாற்றத்தின் பின்னணியிலுள்ள அறிவியல் குறித்தும், மனிதர்களால்தான் காலநிலையில் மாற்றங்கள் உண்டாகின்றன என்பதற்கான ஆதாரங்களையும் தெளிவாக எடுத்துரைக்கிறது.

இந்த அறிக்கைகூறும் முக்கியமான செய்தி, 'பாரிஸ் ஒப்பந்தத்தின்படி அனைத்து நாடுகளும் தங்களது பசுமை இல்ல வாயுக்களைக் கட்டுப்படுத்தினாலும்கூட இந்த நூற்றாண்டின் இரண்டாவது காலகட்டத்தில் புவியின் சராசரி வெப்பநிலை 3 டிகிரி செல்சியஸைத் தொட்டுவிடும்' என்பதேயாகும்.

2014ஆம் ஆண்டு வெளியான ஐந்தாவது மதிப்பீட்டு அறிக்கையில், 'புவி வெப்பமயமாதலுக்கு மனிதர்கள் நடவடிக்கை காரணம்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இன்று வெளியாகியிருக்கும் அறிக்கையில் '1750ஆம் ஆண்டுக்குப் பிறகு வளிமண்டலத்தில் நிறைந்துள்ள பசுமை இல்ல வாயுக்களின் செறிவுக்கு சந்தேகத்துக்கிடமின்றிமனித நடவடிக்கைகள் மட்டுமே காரணம்' என்பதை அறிவியலாளர்கள் உறுதிபட தெரிவித்துள்ளனர்.

இந்த அறிக்கை சொல்லும் மிக முக்கியமான விடயம், இதற்கு முன்பு வந்த ஐந்து மதிப்பீட்டு அறிக்கைகளையும் மனித இனம் சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை என்பதுதான். 'பூமியின்மீதான மனிதர்களின் செல்வாக்கு, ஏற்கனவே பல பிராந்தியங்களில் வானிலை மற்றும் தீவிர காலநிலை நிகழ்வுகளை பாதித்திருக்கிறது' என் கிறது அறிக்கை.

அதிலும் 2014இல் வெளியான ஐந்தாவது மதிப்பீட்டு அறிக்கைக்குப் பிறகு வெப்ப அலைகள், கனமழை, வறட்சி, புயல் போன்ற பேரிடர்களின் தீவிரத்துக்கு மனிதர்களின் நடவடிக்கையே முக்கிய காரணமாக இருந்திருக்கிறது. பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வானது அதிகமாகவோ, நடுத்தரமாகவோ அல்லது குறைவாகவோ எந்தப் பாதையில் சென்றாலும் புவி வெப்பம், 1.5 டிகிரி செல்சியஸ் அல்லது 2 டிகிரி செல்சியஸ் அளவை இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் எட்டிவிடும் என்கிறது அறிக்கை.

தவிர, புவி வெப்பமயமாதல் நீர் சுழற்சியில் ஏற்படுத்தும் தாக்கத்தால், பருவமழைப் பொழிவு மிகப்பெரிய அளவில் பாதிக்கப்படும். இதனால் அதிதீவிர மழைப்பொழிவும் வறட்சியும் ஏற்படும்.

சில இடங்களில் இவ்விரு நிகழ்வுகளும் தொடர்ச்சியாகவோ அல்லது ஒரே நேரத்திலோகூட நிகழும். இதன் தாக்கத்தை நாம் ஏற்கனவே இந்தியாவில் உணரத் தொடங்கிவிட்டோம். ஓராண்டு பெய்ய வேண்டிய மழை, ஒரே நாளில் பொழிவது, தாமதமான பருவமழைக் காலங்கள் மற்றும் மிக அதிகமான வெயில் எல்லாம் சமீப காலங்களில் அதிகரித்திருக்கின்றன. இவை மட்டுமல்ல... இன்னும் இருக்கின்றன.

காபனீரொட்சைட்டு உமிழ்வு அதிகமாகும் பட்சத்தில், நிலமும் கடலும் காபனீரொட்சைட்டை உள்வாங்கும் திறனை இழக்கும். பசுமை இல்ல வாயுக்களின் கடந்தகால மற்றும் எதிர்கால உமிழ்வால் கடல், பனிப் பாறைகள், கடல்நீர்மட்ட உயர்வில் ஏற்படும் மாற்றங்களை மீண்டும் பழைய நிலைக்கு மாற்ற முடியாத நிலை உண்டாகும்.

1970ஆம் ஆண்டுக்குப் பிறகு நிகழ்ந்த உலக சராசரி வெப்பநிலை உயர்வானது, அதற்கு முந்தைய 2000 ஆண்டுகளில் நிகழ்ந்திராத ஒன்று என்கிறது அறிக்கை. அதேபோல 1900ஆம் ஆண்டுக்குப் பிறகு நிகழ்ந்த உலகின் சராசரி கடல்மட்ட உயர்வின் வேகமானது, கடந்த 3000 ஆண்டுகளில் நிகழ்ந்திராத ஒன்று. 2100ஆம் ஆண்டில் 2 மீற்றர் அளவுக்கும், 2150 ஆம் ஆண்டில் 5 மீற்றர் அளவுக்கும் கடல்நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளது.

கடல் வெப்ப அலை நிகழ்வுகளின் எண்ணிக்கை, 1980ஆம் ஆண்டுக்குப் பிறகு இரு மடங்காக அதிகரித்துள்ளது. ஆர்க்டிக் கடற் பகுதியிலுள்ள பனிப்பாறைகளின் பரப்பு 1979-1988 மற்றும் 2010-2019 ஆண்டுகளுக்கு இடைப் பட்ட காலத்தில் 40 சதவிகிதம் மற்றும் 10 சதவிகிதம் குறைந்ததற்கு மனிதர் களின் செயற்பாடுகளால் ஏற்பட்ட வெப்ப மயமாதலே காரணம்.

அறிவியல் ஆதாரங்களுடன் காலநிலை மாற்றத்தின் தீவிரத்தை இந்த அறிக்கை நமக்கு எடுத்துரைத்துள்ளது. பாரிஸ் ஒப்பந்தத்தின்படி உமிழ்வைக் குறைத்தால்கூட இனி நமது இயல்பு வாழ்க்கை பேரிடர்களுக்கு நடுவில் தான் அமையும்.எனினும், தற்போதிருக்கும் உமிழ்வு அளவைக் குறைப்பதுடன், மிக வேகமாக நம் வாழ்விடங்களைப் பேரிடர்களிலிருந்து தப்பிக்கும் வகையில் தகவமைத்துக்கொள்ள வேண்டும். இனி நாம் வெளியிடும் ஒவ்வொரு சிறு உமிழ்வுமே இப்புவியின் எதிர்காலத்தைச் சீரழிக்கும் என்பதை அறிவியலாளர்கள் தெளிவுபடுத்திவிட்டனர். அதன்படி இன்று நாம் ஒரு புதிய உண்மைக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதே உண்மை! கால நிலை மாற்றத்துக்கு எதிரான போரும் சமூகநீதியின் ஓர் அங்கமே!



# சிறுவர் அரங்கம்

## மொட்டைத்தலை

பண்டிதன் கூறியதைக் கேட்ட அரசன் உடனே காவலர்களை அழைத்து, "யாராவது தலையில் முடியில்லாமல் சென்றால் உடனே பிடித்துக்கொண்டு வாருங்கள்" என ஆணை பிறப்பித்தான்.

அரசனின் ஆணையைச் சிரமேற்கொண்டு காவலர்கள் சாலையில் சுற்றும்முற்றும் பார்த்தனர்.

அப்போது அந்த வழியாக மொட்டைத்தலையன் ஒருவன் சென்று கொண்டிருந்தான். உடனே காவலர்கள் அவனைப் பிடித்துச்சென்று அரசனின் முன் நிறுத்தினர்.

அரசனும், "சரி... சரி... உடனே நம் குருநாதர் சொன்னபடி செய்யுங்கள்" என்று கட்டளையிட்டார்.

வந்திருந்த மொட்டைத்தலை ஆசாமிக்கு எதுவுமே விளங்கவில்லை.

"குருநாதர் என்ன சொன்னார்? அரசன் நம்மைப் பிடித்து வரும்படி ஏன் கட்டளையிட்டார்? நம்மை என்ன செய்யப் போகிறார்கள்?" என்ற கேள்விகள் மொட்டைத் தலையனின் உள்ளத்தில் எழுந்து அவனைக் குழப்பம் அடையச்செய்தன.

"உம்... சீக்கிரம் அவன் தலையை எடுத்துக்கொண்டு வாருங்கள்" என்று அரசர் கோபமாகக் கூறினான். அப்போது அரண்மனை வைத்தியர் மருந்துடன் அங்கே வந்து விட்டார். அரசனின் காலுக்கு மருந்தை வைத்து நன்றாக கட்டி விட்டார். பிறகு அரசனிடம் "அரசே! இந்த மொட்டைத் தலையனின் தலையை வெட்டிக் கொண்டு வரும்படி ஏன் கட்டளையிட்டீர்கள்?"" என்று கேட்டார் வைத்தியர்.



(தொடரும்)

# மகாபாரதம்

188



"இதைப்பற்றிமேலும் அரிய விரும்பினால் சுக்கிராச்சாரியாரிடம் (வெள்ளி பகவான்) செல்க" என்றார் பிரகஸ்பதி.

இந்திரன் அவ்வாறே சுக்கிராச்சாரியாரிடம் சென்று வினவ, அவர் ஆத்மஞானத்தைப்பற்றி விரிவாக எடுத்துரைத்தார். அதிலும் மன நிறைவு பெறாத இந்திரன் "இன்னமும் இதைப் பற்றி அரிய விரும்புகிறேன்" என்றான்.

"அப்படியானால் மகா மேதாவியான பிரகலாதனைத்தான் நீ சென்று பார்க்க வேண்டும்" என்றார்.

இந்திரன் அந்தண வடிவத்தோடு பிரகலாதனிடம் சென்றார். மேன்மைக்குரிய வழியைத் தனக்கு உபதேசிக்குமாறு வேண்டிக் கொண்டார்.

அவனோ, தான் மூவுலகிற்கும் வேந்தனான அரச காரியங்களில் ஈடுபட்டிருப்பதால் ஞான உபதேசம் செய்ய நேரமில்லை என்றான்.

அந்தணனோ "தங்களுக்கு நேரம் இருக்கையில் உபதேசியுங்கள்" என்று கூற, பிரகலாதனும் ஒப்புக் கொண்டான்.

பின்னர் ஒரு நாள், அவன் பணிவிடையைக் கண்டு மகிழ்ந்த பிரகலாதன் "நீ வேண்டும் வரம் யாது?" என்றான்.

"உம்மிடம் உள்ள சீலத்தை வரமாக தர வேண்டுகிறேன்" எனக் கூற, பிரகலாதன் திடுக்கிட்டான்.

ஆயினும் கொடுத்த வரத்தை மீற முடியாதவனாக ஆகி "அப்படியே நீ கேட்ட வரத்தைத் தந்தேன்" என்றான்.

உடன் அந்தணன் மறைந்தான். பிரகலாதன் தான் வஞ்சிக்கப்பட்டதை எண்ணி வருந்தினான்.

அப்போது பிரகலாதனிடமிருந்து ஒளிமயமான ஒரு உருவம் வெளிப்பட்டது. "நீ யார்?" என அவன் வினவ "நான் தான் சீலம். உன்னால் விடப்பட்டு செல்கிறேன். (தொடரும்)

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 257

# மதமும் மருத்துவமும் சுகாதார மேம்பாட்டிற்கான இரண்டு கண்கள்

ஆரோக்கியம் என்பது நோயற்ற நிலை மாத்திரமல்ல அதனுடன் உள, சமூக, ஆன்மீக, சுற்றாடல் நன்னிலையும் சேர்ந்த ஒரு உன்னத நிலையே உண்மையான சுகம் என்று பல உலக சுகாதார விற்பன்னர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

மத நம்பிக்கை மனிதனை பூரணப்படுத்துவதற்கு உறுதுணையாக இருப்பதுடன் மதமும் மருத்துவமும் மனிதனின் சுகாதார மேம்பாட்டிற்கான இரண்டு கண்களாகவும் இருக்கின்றன.

இந்து சமயத்தின் அடிப்படைத்தத்துவங்கள் கி.மு.3500 வருடங்களுக்கு முன் சிந்துவெளிப் பிரதேசத்திலே தோற்றம் பெற்றிருந்ததாக புதைபொருள் ஆராய்ச்சிகள் சான்று பகர்கின்றன. ஆனால் தற்போது அறியப்படாமல் இருக்கும் வேறு சில மதங்களின் அடிப்படைக் கருத்துக்கள் அதற்கு முன்னதாகவே தோற்றம் பெற்றிருக்கக்கூடும். அக்காலப்பகுதியில் மருத்துவப் பொருட்கள், அறுவை மருத்துவம், நோய்த் தடுப்பு முறைகள் ஆகியவை அக்கால மக்களால் அறியப்பட்டிருந்தன என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் பல கிடைக்கப் பெற்றிருக்கின்றன.


சிந்துவெளிப் பிரதேசத்தில் தோற்றம் பெற்ற இந்து மதக் கருத்துக்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு அது இந்து மதமாகத் தோற்றம் பெற்றது கி.மு.1500 வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதி என்று கருதப்படுகிறது. இதனை வேதகாலம் என்று சொல்லுவார்கள். இந்த வேதகாலத்திலே மதப்பெரியவர்கள் மருத்துவத் தொண்டையும் ஆன்மீகத்தொண்டையும் ஒருங்கே ஆற்றிவந்ததற்கான சான்றுகள் தென்படுகின்றன.

பல கிறிஸ்தவமத நிறுவனங்களும் இந்து மத நிறுவனங்களும் மருத்துவச் சேவைக்குப் பெரும்பங்காற்றி வருகின்றன. உளவளத்துணைக்கும் பாதிக்கப்பட்டவர்களின் ஆற்றுப்படுத்துகைக்கும் கிறிஸ்தவ அமைப்புகள் ஆற்றிவரும் பங்கு அளப்பரியது. பல மதம் சார்ந்த அமைப்புகள் வைத்தியசாலைகளையே வழிநடத்திவருகின்றன.

திராவிடர்களின் மருத்துவ முறையாக வளர்ச்சி பெற்ற சித்தமருத்துவத்தின் தத்துவங்கள் ஆரம்பத்திலே சிவனினால் சக்தியிடம் கையளிக்கப்பட்டு சக்தி அதனை நந்தியிடம் கொடுத்து நந்திஅதனை சித்தர்களிடம் சேர்ப்பித்தார் என்று பண்டைய நூல்கள் தெரிவிக்கின்றன. இந்தத் தத்துவங்கள் ஆரம்பத்திலே 18 சித்தர்களினால் கையாளப்பட்டிருக்கின்றன. இந்தசித்தர்களிலே முக்கியமானவராக அகத்தியர் இருந்திருக்கிறார். இந்த அகத்தியரின் தலைமையிலேயே சித்தமருத்துவத்துறை முழுமையாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கருத்துக்களை நம்புகிறோமா? என்பது முக்கியமல்ல. ஆனால் அக்காலத்திலிருந்தே மதமும் மருத்துவமும் ஒருங்கிணைந்து செயற்பட்டிருக்கின்றன என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இந்த அண்டசராசரங்கள் அனைத்தினதும் இயக்கத்திற்கு அடிப்படையாக இருப்பது **energy** என்று சொல்லப்படுகின்றசக்திஎன்பது உலகறிந்தஉண்மை. சக்திஇன்றிஎதுவும் இயங்கமுடியாது. அந்தசக்திதான் சிவனின் சரிபாதிஎன்றும் அவள்தான் அனைத்தையும் இயக்கிக் கொண்டிருக்கிறாள் என்றும் இந்துமதம் சொல்கிறது. இந்த உடல் இயக்கமும் சக்தியும் தான் மருத்துவத்திற்கு அடிப்படையாக விளங்குகிறது.



தினமும் அதிகாலையில் எழுந்து குளித்து தோய்த்து உலர்ந்த ஆடைதரித்து கோயிலுக்கு சென்று கோயிலை 3 தடவை வலம் வந்து ஆசனங்கள், அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள் செய்து இறை வணக்கம் செய்ய வேண்டும். என்று இந்து மதம் சொல்லுகிறது. இங்கே உடைச்சுத்தம், உடல்சுத்தம், உடற்பயிற்சி, மன அமைதிஎன்ற நான்கு சுகாதார அறிவுரைகள் அடங்கி இருக்கின்றன. பஞ்சமாபாதங்களை தவிர்க்குமாறு மதங்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றன. இந்த பஞ்சமாபாதங்களில் அடங்கியிருக்கும் கள், காமம் எனப்படுகின்ற மது அருந்துதல், தகாத பாலியல் தொடர்புகள் என்பவற்றை தவிர்த்து விடுவதன் மூலம் AIDS போன்ற பலகொடிய தொற்றுநோய்களிலிருந்தும் ஈரல், நரம்புகள், சம்பந்தமான நோய்களிலிருந்தும் எம்மை தற்காத்துக் கொள்ள முடியும். விரத காலங்களிலே மாப்பொருள் தவிர்த்து பால், பழங்கள், உண்ணும் மரபு அன்றிலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றது. பால், பழங்களிலே வினைத்திறன் கூடிய புரதங்களும் விற்றமின்களும், கனியுப்புக்களும், நார்ப்பொருட்களும் இருப்பதுடன் இது உடல் நிறையை கட்டுப்பாட்டில் வைத்திருக்ககூடிய ஒருநிறை உணவாகவும் விளங்குகிறது.சூரிய நமஸ்காரம் எமது வழிபாட்டு முறைகளில் முக்கியமானது. இது காலையில் சூரிய ஒளியிலிருந்து சூரியனை நோக்கி நமஸ்காரம் செய்யும் ஒருமுறையாகும். இதனையே மேலைத்தேய நாடுகளிலே மருத்து வத் தேவைகளுக்காக சன்பாத் என்று செய்து வரு கின்றார்கள். இதன் மூலம் பல எலும்பு பல் சம்பந்தமான நோய்களை தடுக்க முடியும்.

வேதகாலத்திலே தோன்றிய அதர்வண வேதத்தின் உப வேதங்களில் ஒன்றாக ஆயுர்வேத மருத்துவம் கருதப்படுகிறது. சமஸ்கிருத மொழியிலே எழுதப்பட்டுள்ள இந்த மருத்துவத்தில் நோய்களைக் குணமாக்கும் பல மார்க்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகள் தமிழ் மருத்துவர்களை ஆயுர்வேதர் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பண்டைய யுத்தங்களிலே காயமுற்றோருக்கு பல சத்திரசிகிச்சைகள் நடத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. இதற்கு அவர்கள் செப்பு கத்திகளை பயன்படுத்தி இருக்கின்றார்கள். இரும்புக் கத்திகளை பாவித்தால் துருப்பிடித்து அதிலே ஏற்பு வலி போன்ற கொடிய நோய்களை ஏற்படுத்தும் கிருமிகள் வளரும் ஆபத்து அதிகமாகக் காணப்பட்டதால் தொற்று நீக்கும் வசதிகளற்ற அந்தக் காலத்திலே புத்திசாதுரியமாக பாதுகாப்பான செப்புக் கத்திகளை அந்தச் சித்தர்கள் பாவித்திருக்கிறார்கள்.

கடுமையாக நோய்வாய்ப்பட்டு ஒருவர் படுக்கையில் இருக்கும் பொழுது பண்ணிசை பாடும் அல்லது திருமுறை ஓதும் மரபு அன்று தொட்டு இருந்து வருகிறது. கிறிஸ்தவ மதத்திலும் ஏனைய மதங்களிலும் கூட இந்தமரபு இருந்து வருகின்றது. அமைதியான இசையானது உடல் வலியையும், மனவலியையும் குறைத்து ஒருவர் குணப்படும் வீதத்தையும் அதிகரிக்கும் என்று நவீன ஆராய்ச்சிகள் நிரூபித்து வருகின்றன.

இன்று உலகம் முழுவதும் பிரபல்யம் அடைந்து வரும் யோகாசனப் பயிற்சி முறையை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவர்கள் சைவசித்தர்களே.இன்றும் இந்த யோகாசனப்பயிற்சி முறைபல தொற்று நோய்களின் கட்டுப்பாட்டிற்கு பெரும்பங்காற்றி வருகிறது.

மதநூல்களில் பொதிந்திருக்கும் அரிய மருத்துவக் கருத்துக்கள் அதிலே கலந்து போயிருக்கும் ஒரு சில தவறான கருத்துக்களினால் அடிபட்டுப் போகாமல் பாதுகாக்கப்படவேண்டிய தேவை இருக்கிறது.

மனிதனை இறைவன் பகுத்தறிவுடன் படைத்திருக்கிறான்.எனவே மதக்கருத்துகளும் மனிதனின் பகுத்தறிவால் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தால் மட்டுமே அவை மனிதனை வழிநடத்தும். எனவே மதக்கருத்துக்களும் விஞ்ஞானமயப்படுத்தப்பட வேண்டும் என்ற ஒரு தேவை எழுந்திருக்கின்றது.

சிந்துவெளியிலே இருந்த வழிபாட்டு முறைகளுக்கும் வேதகாலத்து வழிபாட்டு முறைகளுக்கும் இடையே பெரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. உபநிடத காலத்திலே சமயக் கருத்துக்கள் மீள ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றன. சங்ககாலத்திலே மதக் கருத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டு பல விடயங்கள் புதிதாக சேர்க்கப்பட்டு தொகுக்கப்பட்டிருக்கின்றன. எனவே காலத்திற்கு காலம் காலத்திற்கு ஏற்றாற்போல மீளாய்வு செய்யப்பட்டு வரும் சமயக்கருத்துக்கள் தற்போதைய காலத்திற்கு ஏற்றவகையிலும் மீளாய்வு செய்யப்பட்டு விஞ்ஞான மயப்படுத்தப்படுவது தவறான செயலாகாது.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும் . அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.

# அடாவடித்தனம் செய்பவர்களே அரசாங்கத்திற்கு எப்போதும் தேவை

## அரசின் முறையற்ற செயற்பாடுகள் தொடர்பில் சம்பிக்க

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்திற்குக்கல்வியில் நன்கு தேர்ச்சிபெற்ற புத்திஜீவிகள் தேவையில்லை. மாறாக துப்பாக்கியைக் காண்பித்து மிரட்டி, அடாவடித்தனத்தில் ஈடுபடுபவர்களே இந்த அரசாங்கத்தின் விருப்பத்திற்குரியவர்களாவர் என்று பாராளுமன்ற உறுப்பினர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகள் தொடர்பில் அவர் மேலும் கூறியிருப்பதாவது,

ஆசிரியர்கள் அரசியல் நோக்கத்தின் அடிப்படையில் செயற்படுவதாகக் கூறுகின்றனர். ஆனால் ஜனாதிபதித்தேர்தலில் கொழும்பில் பெரும்பான்மையான ஆசிரியர்கள் கோட்டாபய ராஜபக்ஷவிற்கே வாக்களித்தனர். ஆகவே அவர்களது போராட்டத்தின் பின்னணியில் அரசியல் நோக்கம் இருப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை.

அடுத்ததாக மாணவர்களுக்கு இயலுமானவரை விரைவாக கொவிட் - 19 தடுப்பூசியைப் பெற்றுக்கொடுத்து பாடசாலைகளை மீள திறப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவில்லை.

தற்போதைய அரசாங்கத்திற்கு கல்வியில் நன்கு தேர்ச்சிபெற்ற புத்தி ஜீவிகள் தேவையில்லை. மாறாக துப்பாக்கியைக் காண்பித்து மிரட்டி, அடாவடித்தனத்தில் ஈடுபடுபவர்களே இந்த அரசாங்கத்தின் விருப்பத்திற்குரியவர்களாவர்.



இவ்வாறானதொரு சூழ்நிலையில் பல்கலைக்கழக மாணவர்கள் அனைவருக்கும் தடுப்பூசியை வழங்கி, எதிர்வரும் நவம்பர் மாத ஆரம்பத்திலிருந்து பல்கலைக்கழகங்களை மீளத்திறப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அரசாங்கம் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் அச்சமடைந்திருப்பதன் காரணமாகவே பல்கலைக்கழகங்களை மீளத்திறப்பதைத் தாமதிக்கின்றது. எனவே தமது பிள்ளைகளின் கல்வி உரிமைக்காக முன்வந்து குரலெழுப்புமாறு பல்கலைக்கழகமாணவர்களின் பெற்றோர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (நி-4)

# சிறைச்சாலை அச்சுறுத்தல் சம்பவம் தொடர்பாக சபாநாயகரை நாடும் தேர்தல் ஆணைக்குழு

(கொழும்பு)

லொஹான் ரத்வத்தவிற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நாடுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

பொதுப் பிரதிநிதிகள் மீதான மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்க சபாநாயகரின் தலையீட்டை நாடப்போவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தலைமையில் குழு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கூடியபோது, இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் சிறைச்சாலை அச்சுறுத்தல் சம்பவம் தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

குறிப்பாக இந்த சம்பவம் கைதிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் இது மனித உரிமைகளை மீறுவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டது.

அத்தோடு இந்தச் சம்பவம் சட்டம் ஒழுங்குக்கு சவாலாக இருப்பதாகவும் பொது மக்கள் தங்கள் பிரதிநிதிகள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை சேதப்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியது.

சிறைச்சாலை அச்சுறுத்தல் சம்பவம் மக்களிடையே ஜனநாயகம் மற்றும் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் குறித்த சந்தேகங்களை எழுப்பியுள்ள நிலையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சபாநாயகரை வலியுறுத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. (நி-4)

# பாராளுமன்ற அமர்வில்

## அரசை விட சிறப்பாக செயற்பட்ட எதிர்க்கட்சி

### இணையத்தளம் தகவல்

(கொழும்பு)

ஒன்பதாவது பாராளுமன்றத்தில் அரசாங்கத்தை விட எதிர்க்கட்சிகள் சிறப்பாக செயற்பட்டுள்ளன.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஒரு வருடம் கடந்த ஓகஸ்ட் மாதம் நிறைவடைந்துள்ள நிலையில் மிகவும் சிறப்பாக செயற்பட்ட பத்து உறுப்பினர்களை அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று தரப்படுத்தியுள்ளது.

வெரைட் ரிசர்ச் நடத்தும் manthri.lk இணையத்தளம் வெளியிட்டுள்ள சிறப்பாக செயற்பட்ட 10 பேரில் ஐந்து பேர் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நான்கு பிரதிநிதிகளும், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க ஆகியோரும் இதில் இடம்பிடித்துள்ளனர்.

பத்து பேரில் புத்திக பத்திரன முதலிடத்தைப் பிடித்துள்ளார். பாராளுமன்ற வருகை, பாராளுமன்ற விவாதங்களில் பங்கேற்றுக்கருத்து வெளியிடல் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகளுக்கு அமைய Manthri.lk இன் கணிப்பை மேற்கொள்கிறது.

“இந்த அனைத்து உறுப்பினர்களும் பாராளுமன்றத்திற்கு வருகைத் தருவது மாத்திரமல்லாது, அவர்கள் 100 முறைக்கு மேல் பாராளுமன்ற விவாதங்களில் பங்கேற்றுள்ளதோடு, கருத்துகளுக்கு பங்களித்துள்ளார்கள்” என manthri.lk குறிப்பிட்டுள்ளது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உடல் மொழி

ஒருத்தர் யாருடனோ தொலைபேசியிலே பேசிக் கொண்டிருக்கின்றார். அவர் பேசிக் கொண்டிருப்பது என்ன என்பது எங்கள் காதிலே விழவில்லை. இருந்தாலும் அவர் பேசிக் கொள்வது நல்ல செய்தியா? கெட்ட செய்தியா? என்பதை அவர் முகத்தைப் பார்த்தே எங்களால் யூகிக்க முடிகின்றது.

மகிழ்ச்சியான செய்திகளைப் பேசும் போது முகம் மலர்கிறது. புன்னகை பூக்கின்றது. இதிலே ஒரு விடயத்தை கவனியுங்கள். எங்களிடம் பேசிக் கொண்டிருக்கின்றவர் எதிரிலே இல்லை. அவர் எங்கள் குரலை மட்டும் தான் கேட்கப் போகின்றார். எங்கள் முகம் எப்படியிருக்கின்றது என்பதை அவர் பார்க்கப் போவதில்லை. இருந்தும் எங்கள் முகம் ஏன் மலர வேண்டும்.?

இதைத்தான் உடல் மொழி என்பதை எங்களை அறியாமலேயே எங்கள் உடம்பு செய்திகளைத் தெரிவிக்கின்றது. பாருங்கள் அதுதான் உடல்மொழி. ஒருத்தர் தொலைபேசியில் பேசுவதை நீங்கள் தூரத்திலே இருந்து கவனித்துக் கொண்டே அவர் நண்பரோடு பேசுகின்றாரா? மனைவியோடு பேசுகின்றாரா? குழந்தையோடு பேசுகின்றாரா? மேலதிகாரியிடம் பேசுகின்றாரா? அவருக்குக் கீழே பணியாற்றுகிறவரிடம் பேசுகின்றாரா? என்பதை கண்டுபிடிக்கலாம். காரணம் உடல் மொழி. இதைப்பற்றியெல்லாம் கூட சில நிபுணர்கள் சில விபரங்களை சொல்கின்றார்கள்.

குறிப்பாக ஒருத்தர் அவருடன் நாற்காலியில் கிட்டத்தட்ட படுத்துக் கொள்ளாத குறையாக உட்கார்ந்திருக்கின்றார் என்று வைத்துக் கொள்ளுங்களேன். எதிரிலே இருக்கின்றவர் பேசுவது அவருக்குப் பிடிக்கவில்லை என்று அர்த்தமாம்.

தலையை சொறிந்து கொள்வது, வேறு வேறு திசையில் பார்ப்பது, கொட்டாவி விடுவது, கால்களை மாற்றிப்போட்டு உட்காருவது, களைப்பாக கைவிரல்களைப் பின்னிக் கொள்வது, அடிக்கடி கடிகாரத்தைப் பார்ப்பது இப்படியெல்லாம் ஒருத்தர் செய்து கொண்டிருந்தார் என்றால் நாம் சீக்கிரம் அந்த இடத்தைவிட்டு எழுந்து வந்து விடுவது நல்லது.

ஏன் என்றால் இதெல்லாம் அவருடைய சலிப்பு, சோர்வு, ஆர்வமின்மை இதற்கு அடையாளங்கள். எங்கள் பேச்சு அவரை சலிப்படைய வைத்து விட்டது என்று அர்த்தம், அவர் மிகவும் சோர்ந்து போய்விட்டார் என்று அர்த்தம், எங்கள் பேச்சிலே அவருக்கு ஆர்வமில்லை என்று அர்த்தம்.

அதேநேரத்திலே நாற்காலியின் நுனியில் அமர்ந்து, உடலை முன்னுக்கு நகர்த்தி எதிரிலே இருக்கின்றவர் கண்களைப் பார்த்துக் கொண்டே பேசினாலும் சரி அல்லது பேச்சைக் கேட்டாலும் சரி உங்கள் பேரிலே மற்றவர்களுக்குள்ள பிடிப்பு அதிகரிக்கும். நாம் எப்படிப்பட்டவர் என்பதை எங்கள் உடம்பும் நடை உடை பாவனையும் அடுத்தவர்களுக்கு காட்டிக் கொடுத்து விடும்.

உங்கள் உடம்பு உங்கள் பார்வை , நடை, உட்காருகின்ற விதம் இதை வைத்துக் கொண்டே நீங்கள் பொறுப்பானவரா, முரடா, அலட்சியமானவரா, நம்பிக்கைக்கு உரியவரா, நாணயமில்லாதவரா, பயந்தவரா, திறமைசாலியா, அப்பாவியா? என்பதைக் கண்டு பிடித்து விடலாமாம்.

அதனால் உடல்மொழியைப் புரிந்து கொண்டு எங்களை கொஞ்சம் சரி செய்து கொண்டால் வாழ்க்கையில் சுலபமாக பல காரியங்களை சாதித்து விடலாம்.

ஒரு மனநல வைத்தியசாலை. அங்கே ஒருத்தர் ஒரு நாற்காலியிலே உட்கார்ந்து கொண்டு... கார் ஓட்டுவது மாதிரி பாவனை செய்து கொண்டிருந்தார். ஸ்டியரிங்கை திருப்புவது மாதிரி, பின்னால் வருகின்ற வண்டியை நிற்கச் சொல்வது மாதிரி, பின்பு இவர் ஒதுங்கிக் கொண்டு அவருக்கு வழிவிடுகின்ற மாதிரி இப்படி எல்லாம் சேட்டைகள் செய்து கொண்டிருந்தார்.

அதைப்பார்த்த ஒருத்தர் பக்கத்திலே இருந்த ஒருவரிடம் ஏன் இப்படி செய்தார்? என்று கேட்டார்.

இவருக்கு கார் ஓட வேண்டும் என்று ஆசை. அது நிறைவேறாமல் போனதனால் இப்படி செய்கின்றார் என்றார் அவர்.

நீங்கள் சொல்லக் கூடாதா? இப்பொழுது நீங்கள் கார் ஓட்டவில்லை வெறும் நாற்காலியிலே தான் உட்கார்ந்திருக்கின்றீர்கள் என்று. இதற்கு அவர், அது முடியாது. ஏன் என்றால் அந்தக் காரைக் கழுவுவதற்காக அவர் தினமும் எனக்கு 10 ரூபா கொடுத்துக் கொண்டிருக்கின்றாரே என்றார்.

# மாகாண சபைத் தேர்தல்கள்

41

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



சமூகத்தின் பங்கேற்பு சமூக அபிவிருத்தியில் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றது. எனினும், மோதல் மோசமடைந்ததால் வட மாகாணத்தில் இருந்த கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகள் ஒரு பின்னடைவை எதிர்நோக்கின.

தற்போது யுத்தம் முடிவுற்றிருப்பதால் மாகாண நிர்வாகம் பனையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் அபிவிருத்தி, விவசாயம் மற்றும் கடற்றொழில் முதலிய சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு புத்துயிர் அளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

### சர்வதேச சமூகத்தின் பங்கு !

உள்நாட்டு நடைமுறைகளூடாக தேசிய பிரச்சினையின் நியாயமானதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதுமான ஒரு தீர்வுக்காக தமிழ் மக்கள் எப்போதும் பற்றுறுதியுடன் பணியாற்றியுள்ளனர். இலங்கை அரசு தான் இவ் வாய்ப்புக்களை வீணடித்து மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்பட்ட தமிழ் மக்களுக்கெதிரான இன அழிப்பு செயல்களின் மூலம் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்க முயன்றது.

இலங்கை அரசின் அத்தகைய நடத்தை தான் தேசியப் பிரச்சினையை சர்வதேசமயமாக்கி சர்வதேச வகிபாகத்தை ஏற்றுக் கொள்ள இலங்கை அரசை நிர்ப்பந்தித்தது. தவிர்க்க முடியாத ஒரு விளைவாகிய தமிழ் போராளிச் செயற்பாடுகள் தற்போது முடிவடைந்துவிட்டன.

சர்வதேச ஈடுபாட்டின் வாயிலாக அடையப்பெற்ற குறைந்தபட்ச முன்னேற்றத்தையும் இல்லாமல் செய்ய இலங்கை அரசு தற்போது முயன்று வருகிறது. இது, இலங்கையில் தமிழர்கள் ஒரு மக்கள் கூட்டமாக இருப்பதை இல்லாமல் செய்வதற்கே இட்டுச் செல்லும். இலங்கையில் வாழுகின்ற அனைத்து மக்களுக்குமான நீதியும் நிரந்தர சமாதானத்தின் மூலம் அடையப்பெறும் உண்மையான நல்லிணக்கமும் சர்வதேச அனுசரணையின்கீழேயே அடையப் பெறலாம் என்ற உறுதியான கருத்தை த.தே.கூ. கொண்டுள்ளது.

இலங்கை அரசு தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்ய தன்னை மீள் கட்டமைத்து அதன் மூலம் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாதிருந்தமையும் தமிழ் குடிமக்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டமையும் தான் சர்வதேச சமூகத்தின் வகிபாகம் மிகவும் தவிர்க்க முடியாததாக மாறியமைக்கு வழிவகுத்தது என்பதை த.தே.கூ. சுட்டிக் காட்ட விரும்புகிறது. இத்தகைய சூழ்நிலைகளில், சர்வதேச சமூகம் உலகெங்கும் பல சந்தர்ப்பங்களில் நியாயபூர்வமாகவே ஒரு முக்கிய பங்கினை வகித்துள்ளது.

### முடிவுரை !

ஒரு மக்கள் கூட்டமென்ற வகையில் எமக்கேயுரிய தனித்துவத்தை பேணுகின்ற அதேவேளை, எமது மக்களின் வாழ்க்கை மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும். ஒரு மக்கள் கூட்டமென்ற வகையில் எமது அரசியல் உரிமைகளையும் நாம் மீட்டெடுக்க வேண்டும். எனவே, இலங்கைத் தமிழரசுக்கட்சி என்ற பெயரின் கீழ் அதன் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்து இத் தேர்தலில் தமது உறுதியை எடுத்துக்காட்ட தைரியத்துடன் எழுந்து நிற்குமாறு தமிழ் பேசும் மக்களிடம் நாம் வேண்டுகோள் விடுக்கிறோம்.

இருப்பதைக் காப்போம் ! இழந்ததை மீட்போம் !

இவ்வாறான பெரிய தேர்தல் விஞ்ஞாபன அறிக்கை விட்டும் அவர்களது ஆட்சிக் காலத்தில் பெரிதாக எதுவும் சாதிக்கவில்லை என்பதே மக்களின் கருத்து. அதன் பிரதிபலனே 2020ஆம் ஆண்டின் பொதுத் தேர்தல் முடிவுகள் என்று மக்கள் கூறிக் கொள்கிறார்கள்.

அதேவேளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை தலைவராகக் கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (த.தே.ம. முன்னணி) மாகாணசபைத் தேர்தலைப் புறக்கணிக்குமாறு உத்தியோகபூர்வ அறிக்கையொன்றினை வெளியிட்டிருந்தது.

அந்த அறிக்கையில், 'தமிழ் மக்களின் தேசிய அரசியலை வட மாகாணத்திற்குள் முடக்கி விட சிங்கள தேசம் உறுதியாக விரும்கிறது' என்று குறிப்பிடும் த.தே.ம. முன்னணி, "25 வருடங்களாக நிராகரிக்கப்பட்ட, ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட மாகாண சபை முறைமையானது தீர்வல்ல" என்பதோடு, 'இத் தேர்தலில் பங்குபற்றுவதா? வாக்களிப்பதா? யாருக்குவாக்களிப்பது? போன்ற தீர்மானங்களை, தமிழ் மக்களின் மனச்சாட்சிக்கு விட்டு விடுகிறோம்' என்று கூறியது. இதே தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர்," மாகாணசபை முறைமை என்பது, அரசியல் தீர்விற்கான முதற் புள்ளியுமல்ல, முற்றுப் புள்ளியுமல்ல, இடைக் காலத்தீர்வுமல்ல' என்கிற அரசியல் கருத்து நிலைப்பாட்டினைக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### வட மாகாணசபைத்தேர்தல் முடிவுகள் -2013

வட மாகாணத்தில், 11 அரசியல் கட்சிகளும் 9 சுயேச்சைக் குழுக்களும் யாழ்ப்பாணம் மாவட்டத்திலும், 11 அரசியல் கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களும் கிளிநொச்சி மாவட்டத்திலும், 12 அரசியல்கட்சிகளும் 8 சுயேச்சைக் குழுக்களும் மன்னார் மாவட்டத்திலும், 12 அரசியல் கட்சிகளும் 7 சுயேச்சைக் குழுக்களும் வவுனியா மாவட்டத்திலும், 11 அரசியல் கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் போட்டியிட்டன.

தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 38, இரண்டு Bonus உறுப்பினர்களுடன் ஆகும். 2013 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21 ஆம் நாள் மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றது.

போட்டியிட்ட கட்சிகள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக ஐக்கிய கூட்டமைப்பு, ஈழவர் ஜனநாயக முன்னணி, இலங்கை மக்கள் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய சோசலிசக் கட்சி, ஜனநாயகக்கட்சி, சோசலிச சமத்துவக்கட்சி, ஜனசெத பெரமுன, நமது தேசிய முன்னணி, ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி, எக்ஸத் லங்கா மஹா சபா, தேசிய ஐக்கிய அமைப்பு, எக்ஸத் லங்கா பொதுஜன பக்சய, முஸ்லிம் விடுதலை முன்னணிமற்றும் சுயேட்சை குழுக்கள் ஆகியனவாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈழவர் ஜனநாயக முன்னணி, நமது தேசிய முன்னணி,எக்ஸத் லங்கா மஹா சபா, தேசிய ஐக்கிய அமைப்பு, எக்ஸத் லங்கா பொதுஜன பக்சய, முஸ்லிம் விடுதலை முன்னணி ஆகிய7 கட்சிகள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போட்டியிடவில்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை மக்கள் கட்சி, ஐக்கிய சோசலிசக்கட்சி, சோசலிச சமத்துவக்கட்சி, நமது தேசிய முன்னணி, எக்ஸத் லங்கா பொதுஜன பக்சய, முஸ்லிம் விடுதலை முன்னணி ஆகிய 7 கட்சிகள் கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடவில்லை.

ஈழவர் ஜனநாயக முன்னணி, இலங்கை மக்கள் கட்சி, ஐக்கிய சோசலிசக் கட்சி, சோசலிச சமத்துவக்கட்சி, தேசிய ஐக்கிய அமைப்பு, எக்ஸத் லங்கா பொதுஜன பக்சய ஆகிய 6 கட்சிகள் மன்னார் மாவட்டத்தில் போட்டியிடவில்லை.

ஈழவர் ஜனநாயக முன்னணி, இலங்கை மக்கள் கட்சி, சோசலி சசமத்துவக்கட்சி, நமது தேசிய முன்னணி, தேசிய ஐக்கிய அமைப்பு, முஸ்லிம் விடுதலை முன்னணி ஆகிய 6 கட்சிகள் வவுனியா மாவட்டத்தில் போட்டியிடவில்லை.

ஜனநாயக ஐக்கிய கூட்டமைப்பு, ஈழவர் ஜனநாயக முன்னணி, இலங்கை மக்கள் கட்சி, ஐக்கிய சோசலிசக்கட்சி, சோசலிச சமத்துவக்கட்சி, நமது தேசிய முன்னணி, முஸ்லிம் விடுதலை முன்னணி ஆகிய 7 கட்சிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிடவில்லை.

இத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (A), அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (B), நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (C), செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை (D) அட்டவணை 39 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 39
வடமாகாணசபை 2013

| | |
|---|---|
| A | 719,477 |
| B | 485,813 |
| C | 35,239 |
| D | 450,574 |

போட்டியிட்ட கட்சிகளில்/குழுக்களில் மூன்று கட்சிகளுக்கு மட்டுமே ஆசனங்கள் கிடைத்தன.

அம் மூன்று கட்சிகளும் பெற்ற வாக்குகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (353,595), ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (82, 838), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (6,761). அவை பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அட்டவணை 40 இல் காட்டப்பட்டுள்ளது.

(தொடரும்...)

# தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்

# இராஜாங்க அமைச்சருக்கு எதிராக சாட்சியமளிக்கும் போது பாதுகாப்பு கேள்விக்குறியாகும் - சிவசக்தி ஆனந்தன்

(வவுனியா)

**அனுராதபுரத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச்செயலாளர் சிவசக்தி ஆனந்தன் பகிரங்கமாக கோரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை மதுபோதையில் அனுராதபுரம் சிறைச்சாலைக்குள் தனது சகபாடிகளுடன் பிரவேசித்த விடயதானத்திற்கு பொறுப்பாகவிருந்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் முழந்தாளிடச் செய்து இருவரை மிகமோசமாக அச்சுறுத்தியுள்ளார்.

இவ்விதமான செயற்பாடுகள் இந்த நாட்டில் சிறுபான்மையினத் தேசிய இனங்களை தற்போது ஆட்சியில் உள்ளவர்கள் எவ்வாறு நடத்துகின்றார்கள் என்பதை சர்வதேசத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. ஆகவே, இத்தகைய குரூரமான மனோநிலை கொண்டவர்களிடத்தில் நீதியை, நியாயத்தினை எதிர்பார்க்க முடியாது என்பதும் அப்பட்டமாக வெளியாகியுள்ளது.

தற்போது இராஜாங்க அமைச்சர் சிறைச்சாலை விடயதானத்திலிருந்து மட்டும் பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார். இந்த செயற்பாட்டை அரசாங்கம் குறித்த விடயத்திற்கான பொறுப்புக்கூறலாக படம் காட்டுவதற்கு முயற்சிக்கின்றது.

மேலும், சிறைச்சாலை நிர்வாகம் இவ்விதமான சம்பவம் ஒன்றே நடைபெறவில்லை என்கிறது. இராஜாங்க அமைச்சர் சிறைக்குச் சென்றேன் மது போதையில்லை என்று வாக்குமூலம் கூறுகின்றார். பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அனுமதிப்பத்திர துப்பாக்கியை வைத்திருந்தார் இராஜாங்க



அமைச்சர் என்கிறார். இவ் வாறு பல விநோதமான கருத்துக்கள் வெளியாகியுள் ளன.

இதனை விட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை தீவிரமாக முன்னெடுப்பதாகவும் கூறுகின்றது. இந்த ஆணைக்குழு கடந்த காலங்களில் எத்தனை விடயங்களுக்கு நீதியை நிலைநாட்டியிருக்கின்றது என்பது ஊரறிந்த உலகறிந்த விடயம். ஆக இந்த விசாரணைக்குழுவின் முடிவு இப்போதே தெரிந்த தொன்றே.

இந்த நிலையில் அனுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் மிகுந்த பாதுகாப்பு அச்சத்திற்கு உள்ளாகியிருப்பதாக அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே இலங்கையின் வரலாற்றில் வெலிக்கடை, மகசீன் அனுராதபுர கலவரங்களும் கைதிகள் படுகொலை விடயங்களும் தமிழர்களை மையப்படுத்தியே அரங்கேற்றப்பட்டிருக்கின்றது.

அவ்வாறிருக்கையில், மிக சொற்பமான எண்ணிக்கையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு திரைமறைவில் திட்டப்படும் திட்டங்களால் ஆபத்துக்கள் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் வெகுவாகவே ஏற்பட்டுள்ளது. இதனைவிட, அதிகாரத்தில் உள்ள இராஜாங்க அமைச்சர் ஒருவருக்கு எதிராக சாட்சியமளிக்கின்ற போது அவர்களின் பாதுகாப்பு நிச்சயம் கேள்விக்குறியாகும்.

காரணம், சிறை அதிகாரிகளும் இந்த விடயத்தில் நியாயமாக நடந்து கொள்ளும் மனோநிலையில் இல்லை. ஆகவே வேறெந்த காரணங்களை வைத்தும் தமிழ் அரசியல் கைதிகள் பழிவாங்கப்படுவதற்கும் வாய்ப்புக்கள் இல்லாமல் இல்லை.

எனவே, அவர்களின் பாதுகாப்பை உடன் உறுதிப்படுத்த வேண்டும். அதற்கு முதற்கட்டமாக அவர்களை வடக்கு கிழக்கில் உள்ள சிறைச்சாலைகளுக்கு இடமாற்ற வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4,250,299)

# உலகின் மிகப்பெரிய ஒன்லைன் தியான நிகழ்வில் மில்லியன் கணக்கானவர்களுடன் இணையுங்கள் ஏகம் உலக அமைதிக்கான உற்சவம்- 2021

**ஏகம் நடத்தும் இந்த நான்காவது வருடாந்த அமைதி உற்சவம் உலகம் முழுவதும் 20 மில்லியனுக்கும் அதிகமான அமைதியை தேடுபவர்களின் பங்கேற்பானது எதிர்பார்க்கப்படுகின்றது.**

தற்போது ஒன்றரை வருடங்களுக்கு மேலாக இன, மத, கலாச்சார, புவியியல் மற்றும் பொருளாதார பிரிவின்றிஅனைத்துவித மக்களையும் இந்த கொரோணா தொற்று வாட்டி வதைத்து வருகிறது. இது உலகை பல்வேறு நிலைகளில் தாக்கியுள்ளது. சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக, அரசியல் ரீதியாக, மேலும் தனிநபர்களின் உடல், மன மற்றும் உணர்ச்சிநல்வாழ்வையும் பாதித்துள்ளது. இருப்பினும் கொரோணா தொற்றை தாண்டியும் ஒரு மனிதன் எதிர் கொள்ளும் சவால் களை பார்க்கும் போது, உலகளாவிய ரீதியில் அமைதியின்மை, சமத்துவமின்மை, வன்முறையினால் பிளவு, சமூகங்களிடையேசண்டை, தனிப்பட்ட மட்டத்தில் கவலை மற்றும் மனச்சோர்வு. இவற்றிற்கு தீர்வு எவ்வாறானதாக இருப்பினும் அது "அமைதி" எனும் திடமான அஸ்திவாரத்தை கொண்டே அமைகிறது.

அதாவது, ஏகம் உலக அமைதி உற்சவமானது முக்தி நிலையில் உள்ள ஞானிகளான ஸ்ரீ ப்ரீதா ஜி மற்றும் ஸ்ரீ கிருஷ்ணாஜியினால் பிரிவினை மற்றும் மோதலில் இருந்து மனித குலத்தை மாற்றவும், ஒற்றுமை மற்றும் அமைதிக்கு மனித குலம் திரும்புவதற்கான வெகு ஜன இயக்கமாக கருத்தரிக்கப்பட்டது. தன்னுடன், வாழ்க்கையுடன் மற்றும் உலகத்துடன் ஒருவர் இருக்க ஒரு அமைதியான இடமாக நம் உலகம் மாற செயல்படு வருபவர்கள்.

ஏகம் உலக அமைதியின் நான்காவது ஆண்டு உற்சவமானது இந்த ஆண்டு செப்டம்பர் 17 முதல் 19 வரை நடைபெறுகிறது. இந்த உற்சவத்தின் சிறப்பம்சமாக உலகம் முழுதும் இருந்து 20 மில்லியன் அமைதி விரும்பிகள் தொடர்ந்து 3 நாட்களிற்கு 100 இற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து இணையம் மூலமாக அமைதிக்காக உலகின் மனித உணர்வை மாற்றுவதற்கான மிகப் பெரிய ஒன்லைன் கூட்டத்தில் இணையவுள்ளனர்.

இந்த ஆண்டுக்கான இணையவழி தியான நிகழ்வில் நிலையான புதுவுலகிற்கான உலகளாவிய கூட்டணியின் பொது செயலாளரான மேதகு சத்யா திரிபாதியும், நியூசிலாந்து பாராளுமன்ற உறுப்பினரான கோல்ரிஸ் கஹ்ரமானும் சிறப்பு விருந்தினர்களாக பங்குபற்ற உள்ளனர். இந்த நிகழ்வை ஏகத்தின் இணை ஸ்தாபகர்கள் ஸ்ரீ ப்ரீதாஜி மற்றும் ஸ்ரீ கிருஷ்ணாஜி ஆரம்பித்து வைப்பர்.

தொலைநோக்கு பார்வையாளர்களான ஸ்ரீ ப்ரீதாஜிமற்றும் ஸ்ரீ கிருஷ்ணாஜியிடம் இந்நிகழ்வின் யோசனைகளை பற்றி கேட்ட போது, "ஏகம் உலக அமைதி உற்சவமானது. உலகளாவிய ரீதியில் நடாத்தப்படும் தியான நிகழ்வாகும். இது மில்லியன் கணக்கான அமைதிப் பிரியர்களை, பரந்த மனிதக் கூட்டமைப்பினை ஒன்றிணைக்க அழைக்கிறது. நாம் அனைவரும் ஒன்று என்றும், ஒரே உணர்வினால் தொடர்புடையவர்கள் என்பதையும் உணரும் போதே அமைதியானது நம்மிடையே உருவாகிறது. இந்த உணர்வு சகல உயிர்களையும் உணர்வூட்டுகிறது. ஏகம் சத் விப்ரஹா பாஹீதுஹா வந்தி என்றால் நாம் அனைவருமே ஒரு விடயத்துக்கு இணைக்கப்பட்டவர்களாக காணப்படுகிறோம். அதாவது அனைத்து வடிவங்கள், தோற்றங்கள், இனங்கள், மத நம்பிக்கைகள், உயிரியல் மற்றும் உணர்ச்சிகள் என எல்லாம் ஒன்று 'ஏகம்' என்று பொருள்படுகிறது. இந்த நுண்ணறிவை உணர ஏகம் உலக அமைதி உற்சவம் உங்களை அழைக்கிறது. இந்த வருட உற்சவமானது இது போலான கடினமானதொரு காலத்தில் உலகில் உள்ள பலரை ஈர்த்து அமைதிக்கான முக்கியத்துவத்தை அறியத்தருகிறது.

இந்த நிகழ்வானது முற்றிலும் இலவசமாக தினமும் 55 நிமிடங்கள் மாலை 6 மணி முதல் 7 மணிவரை கடந்த செப்டெம்பர் 17 முதல் 19 இன்று வரை நடைபெறும். PK Consciousness என்ற Youtube மற்றும் Facebook தளத்தினூடாக இந்நிகழ்வை நீங்கள் நேரலையாக காணலாம். ஆரம்ப நிலையில் உள்ளவர்கள் முதல், அனுபவம் வாய்ந்த அல்லது தியான பயிற்சியாளர்கள் வரை திட்டமிட்ட நேரத்தில் நேரலையில் இணைந்து அமைதி உற்சவத்தில் பங்குபற்றலாம்.

ஏகம் அமைதி உற்சவமானது, உலகளாவிய ரீதியில் தனித்துவமான நிகழ்வாக திகழ்கிறது, ஏனென்றால் உற்சவத்தின் ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான தனிநபர்கள், குடும்பங்கள், நிறுவனங்கள் ஒரே ஒரு தேவைக்காக தியானத்தில் ஈடுபடுகின்றனர். மேலும் உலக அமைதிக்காகவும் தியானிக்கின்றனர். இதில் மேலும் ஆயிரக்கணக்கான அமைதி விரும்பிகள், உற்சவத்தை தங்கள் ஊழியர்களுடன் கூட்டாகப் பகிர்ந்துகொள்ளும் நிறுவனங்கள் மற்றும் மாணவர்கள், பல ஊடக பங்காளிகள், சாட்டலைட் சேனல்கள், உள்ளூர் கேபிள் சேனல்கள் மற்றும் ஸ்ட்ரீமிங் தளங்கள், அமைதி தளங்கள், சமூக மையங்கள், கோவில்கள்போன்றவற்றில் அமைதிக்கான உற்சவமாக ஒளிபரப்பு செய்யப்படும்.

இந்நிகழ்வானது மொத்தம் 19 மொழிகளில் திரையிடப்படும், ஆங் கில மொழியோடு சேர்த்து. சில குறிப்பிட்ட இந்திய மொழிகள் பின்வருமாறு ஹிந்தி, மலையாளம், தெலுங்கு, தமிழ், மற்றும் கன்னடம். சர்வதேச மொழி




களான ஸ்பானிஷ், இத்தாலியன், ரஷ்யன், ஜெர்மன், ஸ்வீடிஷ், சைனீஸ் மற்றும் கொரியனோடு மேலும் சில மொழி கள். இம்முறை உலகை சுற்றியுள்ள 43 நகரங்களில் இந்த உற்சவம் தொடங்கி வைக்கப்பட உள்ளது. அமைதி நிலையங்களும், ஒரு சில அமைதி தூதுவர்களும், அமைதி தொடர்பாக செல்வாக்கு செலுத்துபவர்களையும் அழைப்பதன் மூலமாக உலக அமைதிக்கான ஏகோபித்த பங்களிப்பு செய்யப்படுகிறது.

ஒவ்வொரு நாளும், இணை ஸ்தாபகர்களான ஸ்ரீ ப்ரீதாஜி மற்றும் ஸ்ரீ கிருஷ்ணாஜியின் சிறப்பு அமைதி செய்தியுடன் உற்சவமா னது ஆரம்பமாகும். மேலும் சிறப்பு விருந்தினரின் உரையாடலுடன் சிறப்பு தியானம் நடைபெறும்.

நாள் 3 (செப்டம்பர் 19 இன்று ஞாயிற்றுக்கிழமை) பூமிஅமைதி பெறுவதற்கு. இத்துடன் இறுதி நாள் முடிவடையும். இது பூமியை முழுவதுமாக குணப்படுத்துவதற்கான தியானம். இந்த தியானம் அமைதியை கொண்டு வர விரும்புகிறது. மனித நேயத்தை மேம்படுத்தவும், இந்த பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களையும் புத்தாயையும் குணப்படுத்துவது இதன் நோக்கம்.

மேலும் தகவல்களுக்கு
இணையம் - **http://www.ekam.org/ewpf/**
மின்னஞ்சல் - **info@ekam.org**
தொலைபேசி - **+91 90009 91043**

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2021-17.10.2021

**ஜோதிடக் கலாமணி சிவஸ்ரீ சிங்காரம்**



**பிறருக்கு உதவுவதில் பிரியம் கொண்ட மேட இராசி வாசகர்களே!**




புரட்டாதி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். அவர் பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதி சூரியனுடனும், 6-க்கு அதிபதி புதனுடனும் இணைந்திருக்கின்றார். குருவின் பார்வை உங்கள் இராசிநாதன் மீது பதிந்து, குரு மங்கள யோகத்தை உருவாக்குவதால் மாதம் முழுவதும் நல்ல சம்பவங்கள் நடைபெறப்போகின்றது.

**மகர குருவின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். பிதுர் ராச்சிய ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான குரு நீச்சம் பெறுவதால் தந்தையின் உடல் நலத்தில் கவனம் தேவை. விரயங்கள் கட்டுக்கடங்கி இருந்தாலும் வீடு மாற்றங்களாலும், இடமாற்றங்களாலும் மன நிம்மதி கொஞ்சம் குறையலாம். முன்னோர் வழிசொத்துக்களில் ஒரு பகுதியை விற்க நேரிடலாம். வெளிநாட்டிலிருந்து நீங்கள் எதிர்பார்த்த தகவல் வந்து சேரும்.

**மகரச் சனியின் வக்கிர நிவர்த்தி காலம்**

உங்கள் இராசிக்கு தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியானவர் சனிபகவான். அவர் இதுவரை வக்கிர இயக்கத்தில் இருந்தார். எனவே கடந்த காலத்தில் தொழில் மந்த நிலையில் இருந்திருக்கலாம். அந்தநிலை இப்பொழுது மாறப்போகின்றது. புரட்டாதி 11 ஆம் திகதி சனி வக்கிர நிவர்த்தியாகின்றார். அதன் பிறகு தொழில் வளம் சிறப்பாக இருக்கும். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொடுப்பர்.

சனி உங்கள் இராசிக்கு லாப ஸ்தானத்திற்கும் அதிபதியானவர். எனவே புதிய ஒப்பந்தங்களும், தொழில் வளர்ச்சியும் ஏற்படும்.

## உத்தியோகத்தில் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும்

இதுவரை சனி வக்கிர இயக்கத்தில் இருந்ததால் கொடுக்கல்- வாங்கல்களில் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கலாம். பாக்கிகள் வசூலாகாமல் அதன் மூலம் பகையும் ஏற்பட்டிருக்கலாம். இந்தப் பிரச்சினைகள் இப்பொழுது அகலும்.

**புதனின் வக்கிர நிவர்த்திக் காலம்**

மாதத் தொடக்கத்தில் கன்னி இராசியில் புதன் உச்சம் பெற்றிருக்கின்றார். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். சகாய ஸ்தானாதிபதியான புதன் உச்சம் பெற்றிருப்பதால் பல வழிகளிலும் உங்களுக்கு நன்மைகள் கிடைக்கும். புரட்டாதி 17 ஆம் திகதி புதன் வக்கிர நிவர்த்தியாவதால், உத்தியோகத்தில் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். புதியவேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அதுவும் கிடைக்கும்.

**விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்**


மாதத் தொடக்கத்தில் சுக்கிரன் சப்தம ஸ்தானத்தில் வீற்றிருக்கின்றார். எனவே வாழ்க்கைத் துணை வழியே எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். அவர்களின் உத்தியோகத்திற்காக ஏதேனும் ஏற்பாடுகள் செய்திருந்தால் அது கைகூடும். திருமணம், மணிவிழா போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். புரட்டாதி 17 ஆம் திகதி விருச்சிகத்திற்கு சுக்கிரன் செல்கின்றார். அங்குள்ள கேதுவோடு சுக்கிரன் இணைவதால் குடும்பத்தில் பிரச்சினைகள் உருவாகலாம்.

இம்மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் சூலாயுதம் தாங்கிய அம்பிகையை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் குடும்ப நிர்வாகம் சிறப்பாக இருக்கும். கணவன்-மனைவியின் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும். மகர குருவின் சஞ்சாரத்தால் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

உத்தியோகத்தில் ஊதிய உயர்வும், பதவி உயர்வும் எதிர்பார்த்தபடி வந்து சேரும். நவராத்திரி விழா நாட்களில் விரதமிருந்து பராசக்தியை வழிபட்டால் எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும்.



**எதையும் முன்னின்று நடத்தும் திறமைசாலிகளான இடப இராசி வாசகர்களே!**




புரட்டாதி மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சுக்கிரன் 6 ஆம் இடத்தில் தன் சொந்த வீடான துலாம் இராசியில் இருக்கின்றார். இராசியிலேயே ராகுவும், சப்தம ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். ஜென்மத்தில் ராகு இருப்பதால் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். சுக்கிர பலமும் நன்றாக இருப்பதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

மகர குருவின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவர் மாதத் தொடக் கத்திலேயே மகர இராசிக்கு வந்து வக்கிரம் பெற்றும், நீசம் பெற்றும் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு குரு பகவான் பகை கிரகம் என்பதால் அவர் நீச்சம் பெறுவது ஒரு வழிக்கு நன்மைதான். அதேநேரத்தில் அவரது பார்வை உங்கள் இராசியில் பதிவதால் நீண்ட நாட்களாக நடைபெறாமல் இருந்த ஒரு சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். ஆரோக்கியத் தொல்லையிலிருந்து விடுபடுவீர்கள்.

மகரச் சனியின் வக்கிர நிவர்த்தி காலம்

மாதத் தொடக்கத்தில் சனிபகவான் 9ஆம் இடத்தில் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். புரட்டாதி11 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகின்றார். 9, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி பகவான் உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகமாவார். அவர் வக்கிர நிவர்த்தியாவது நன்மை தான். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொலைதூரத்தில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக்கொள்ளலாமா? என்று சிந்திப்பீர்கள். பாகப்பிரிவினை சம்பந்தமாக சகோதரர்களுக்குள் நிலவிய பிரச்சினைகள் தீரும். பூர்வீக சொத்துக்கள் கைக்கு கிடைத்ததைப் புதுப்பிக்கும் எண்ணம் கைகூடும். புகழ் பெற்ற பெரிய நிறுவனங்களிலிருந்து அதிக சம்பளம் தருவதாகச் சொல்லி அழைப்புகள் வரலாம்.

## தொழில் வளம் சிறப்பாக இருக்கும்

புதனின் வக்கிர நிவர்த்திக் காலம்

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு பஞ்சம ஸ்தானமான பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் புதன் உச்சம் பெற்றும், வக்ரம் பெற்றும் சஞ்சரிகின்றார். புரட்டாதி 17 ஆம் திகதி புதன் வக்ர நிவர்த்தியாகின்றார். உச்சம் பெற்ற புதனால் மிகுந்த நற்பலன்கள் உங்களுக்கு கிடைக்கப் போகின்றது. தொழில், உத்தியோகத்தில் முன்னேற்றம், எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் லாபம், பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் போன்றவை கிடைக்கலாம். புகழ் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர்.

விருச்சிக சுக்கிரனின் சஞ்சாரம்

புரட்டாதி 17ஆம் திகதி விருச்சிக இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். இராசிநாதன் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அதிகாரிகள் அனுகூலமாக நடந்துகொள்வர். உத்தியோகத்தில் உயர்பதவிகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். பயணங்கள் பலன் தரும். வாழ்க்கைத் துணைக்கும் வேலைகள் கிடைத்து வருமானம் வரலாம்.

இம்மாதம் நவராத்திரி நாட்களில் விரதமிருந்து அம்பிகை வழிபாட்டை மேற்கொள்வது நல்லது

பெண்களுக்கான பலன்கள்

வளர்ச்சி கூடும் மாதம் இது. கணவன்-மனைவிக்குள் அன்பும், அரவணைப்பும் அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். நீண்ட தூரத்தில் பணிபுரிந்து வந்தவர்கள், சொந்த ஊருக்கு அருகில் பணிபுரிய செய்த முயற்சிகைகூடும். திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். நூதனப் பொருட்களின் சேர்க்கை உண்டு. தாய்வழி உறவினர்கள் உதவிகள் கிடைக்கும். துர்க்கை வழிபாடு துயரங்களைப் போக்கும்.

(தொடரும்)

‘**சிந்தனை**’ என்ற வயலுக்கு ‘**ஆராய்ச்சி**’ என்றநீர் பாய்ச்சி ‘**மூட மதி**’ என்ற களையை முற்றிலும் அகற்றினால், ‘**விவேகம்**’ என்ற விளைவு ஏற்படும்.
–மு.கருணாநிதி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மரணச் சடங்கில் பங்கேற்க 15 பேர் மதுபான சாலையில் 1500க்கு மேல்

ஒரு நாட்டில் வெளிவரக்கூடிய சுற்றுநிருபம் எங்கும் எவ்விடத்தும் உள்ளவாறு அமுல்படுத்தப்பட வேண்டும்.

மாறாக குறித்தவொரு சுற்றுநிருபத்தை தென்பகுதியில் ஒரு மாதிரியாகவும் வடபகுதியில் இன்னொரு வகையிலும் அமுல்படுத்த முடியாது.

ஆனால் ஒரு சுற்றுநிருபத்தின் அமுலாக்கம் இலங்கையில் வெவ்வேறு விதமாக அமுல்படுத்தப்படுவதைக் காணமுடியும்.

உதாரணத்துக்குகொரோனாத் தொற்றைத் தடுக்கும்பொருட்டு நாடு பூராகவும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஆலயத் திருவிழாக்கள், திருமணச்சடங்குகள் என எதனையும் நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

மாறாக, மரணச்சடங்கை வீட்டில் நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அதில் பதினைந்து பேர் மட்டுமே பங்கேற்க முடியும்.

இது இலங்கை அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபம்.

இந்த சுற்றுநிருபத்தை நடைமுறைப்படுத்துவதில் அந்தந்த பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுசுகாதாரப் பரிசோதகர்கள், இராணுவத்தினர், பொலிஸார் தீவிரமாகச் செயற்படுவர்.

அதிலும் மரணச்சடங்கு நடப்பதாக இருந்தால் அந்த இடத்தில் சுகாதாரப் பரிசோதகர்கள், இராணுவத்தினர், பொலிஸார் பிரசன்னமாக இருப்பர்.

இதன் காரணமாக இறந்தவரின் குடும்ப உறுப்பினர்கள் பதட்டமாகக் காணப்படுவர்.

இறந்தவரை நினைந்து அழுவதா! காக்கிச்சட்டை அணிந்தவர்கள் அடிக்கடி சுற்றி வந்து போவதைக் கண்டு அஞ்சுவதா! என எதுவும்தெரியாமல் திகைத்து நிற்பர்.

மரணச் சடங்குக்கு வருகின்றவர்களை நில்! வா! போ! என்று அதட்டுவதில் இராணுவத்தினரின் நடவடிக்கை போர்க்காலச்சூழலை நினைவுபடுத்தும்.

இதற்கு மேலாக, இறந்தவரின் உடலை மயானத்துக்கு எடுத்துச் செல்லும்போது ஏ.கே 47 ஏந்திய இராணுவத்தினர் காவல் செய்ய இரண்டொரு பேருடன் இறுதி ஊர்வலம் நடக்கும்.

பரவாயில்லை. கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக இவற்றையெல்லாம் தாங்கிக் கொள்ள வேண்டும் என்ற வகையில் ஆறுதலடைந்தால்,

நேற்று முன்தினம் (17) மாலைப் பொழுதில் நாடுபூராகவும் உள்ள மதுபானசாலைகள் திறக்கப்பட்டு வியாபாரம் நடந்தபோது ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் மதுபானசாலைக்கு முன்பாகத் திரண்டு வரிசையில் காத்து நின்றதைக் காண முடிந்தது.

அந்தோ! ஆயிரக்கணக்கான மோட்டார் சைக்கிள்கள், கார் உள்ளிட்ட வாகனங்கள் என மதுபானசாலை அமைந்த வீதியெங்கும் ஒரே வாகன நெருக்கடி.

விபரம் புரியாதவர்கள்; கூடிநின்ற சனக்கூட்டத்தைக் கண்டு ஐயகோ! பெரும் விபத்து நடந்துபோனதோ, பேரிழப்பு ஏற்பட்டுவிட்டதோ என்று பயந்துபோய் நிற்கையில்,

மதுபானம் வாங்குவதற்கே இப்பெரும் சனக்கூட்டம் என்ற தகவல் அறிந்து ஆறுதல் அடைந்த சம்பவங்களும் உண்டு.

இங்குதான் இரண்டு மீற்றர் இடைவெளி எங்கே? சுகாதார வைத்திய அதிகாரிகள் எங்கே? பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் எங்கே? என்ற குரல் ஓங்கி ஒலிக்கிறது.

என்ன செய்வது இளகிய மனிதர்கள் என்றால் அவர்களின் தலைமேல் ஏறியிருந்து சவாரி செய்வதற்கு அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் தயார் என்பதுதான் உண்மை.

# பல்கலைக்கழகங்களை மீண்டும் திறக்க நடவடிக்கை

(கொழும்பு)

மூடப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு கோவிட் தடுப்புசிகளை வழங்குவதன் மூலம் பல்கலைக்கழகங்களை விரைவில் மீண்டும் திறக்கத் திட்டமிட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத்அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களைத் துரிதமாகத் திறப்பது தொடர்பாக அரசாங்க தகவல் திணைக்களத்தில் அறிக்கை ஒன்றை வெளியிடும் போதே அதன் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நோக்கத்திற்காக சுகாதாரத் துறையுடன் இணைந்து விரைவான திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

பல்கலைக்கழகங்களில் 30 வயதிற்குட்பட்ட ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கான தடுப்புசி திட்டத்தின் முன்னேற்றத்திற்கான கண்காணிப்பு அமைப்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நேரடி மேற்பார்வையின்கீழ் செயற்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

அந்த முன்னேற்றத்தை கருத்திற்கொண்டு, சுகாதாரத் துறை துணைவேந்தர்கள் மற்றும் பிற தொடர்புடைய தரப்பினருடன் கலந்துரையாடிய பின்னர் பல்கலைக்கழகங்களை மீண்டும் திறக்க முடியும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-3)

## கடமைகளில் ஈடுபட்ட அதிபர், ஆசிரியர்களுக்கு 5 ஆயிரம் கொடுப்பனவு

### கல்வியமைச்சு சுற்றறிக்கை

(கொழும்பு)

அரச பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு உரிய கடமைகளில் ஈடுபடும் ஆசிரியர், அதிபர்களை ஊக்குவிக்கும் முகமாக 2021 செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்கள் இரண்டுக்கும் ஒரு மாதத்துக்கு 5 ஆயிரம் ரூபாய் என்றவாறு கொடுப்பனவு வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அமைச்சரவை உபகுழுவின் பரிந்துரைக்கு அமைய 2021 நவம்பர் மாதம் முன்வைக்கப்படவுள்ள 2022 ஆம் வருட வரவு செலவு முன்மொழிவு மூலம் ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கு அரசினால் பொருத்தமான அவசிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

என்றாலும் அரச பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு உரிய கடமைகளில் ஈடுபடும் ஆசிரியர், அதிபர்களை ஊக்குவிக்கும் முகமாக 2021 செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்கள் இரண்டுக்கும் ஒரு மாதத்துக்கு 5 ஆயிரம் ரூபாய் என்றவாறு கொடுப்பனவு செய்ய அமைச்சரவை அனுமதிகிடைத்துள்ளது.

அதன்படி உரிய கல்வி வலயங்களின் அதிபர்களினால் பரிந்துரைக்கப்பட்டு வலய கல்வி பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும் கடமையை மேற்கொண்ட ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு இந்த 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அதிபர்களுக்கு கொடுப்பனவை செலுத்தும் போது வலயக் கல்வி பணிப்பாளர்களின் பரிந்துரை அடிப்படையில் உரிய கொடுப்பனவு நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-03)

## முல்லையில் விபத்து ஒருவர் படுகாயம்

### இருவர் கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில் நேற்று இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக முள்ளியவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு தண்ணீருற்று குமுழமுனை வீதியில் கப்ரக வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச ப.நோ.கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான கப் வாகனமொன்றே விபத்துடன் தொடர்புடையதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் விபத்தினை ஏற்படுத்திவிட்டுத் தப்பிச் சென்ற கப்ரக வாகனத்தைச் செலுத்திய சாரதி ஒருவரும் சாரதியாக ஆள் மாற்றம் செய்ய முயற்சித்த இளைஞன் ஒருவருமாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் படுகாயமடைந்த இளைஞன் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-3)

## மருத்துவக் குறிப்பு

தினமும் காலையில் பதநீர் சாப்பிட்டு வர இரத்த அழுத்த நோய்மற்றும் இருதய சம்பந்தமான நோய்கள் குணமாகும்.

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖‘உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். 16நம்பிக்கைகொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர் நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர்.

❖நம்பிக்கை கொண்டோர் பின்வரும் அரும் அடையாளங்களைச் செய்வர்: அவர்கள் என் பெயரால் பேய்களை ஓட்டுவர் புதிய மொழிகளைப் பேசுவர்.

❖ பாம்புகளைத்தம் கையால் பிடிப்பர். கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்குத் தீங்கு இழைக்காது. அவர்கள் உடல் நலமற்றோர்மீது கைகளை வைக்க, அவர்கள் குணமடைவர்”

❖‘ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள் அவருக்காக பாதையைச் செம்மையாக்குங்கள்

❖பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரப்பப்படும் மலை, குன்றுயாவும் தாழ்த்தப்படும் கோணலானவை நேராக்கப்படும் கரடு முரடானவை சமதளமாக்கப்படும்.

❖மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பைக் காண்பர்’.”

## கிளிநொச்சியில் நாளை முதல்

# 20-29 வயது பிரிவினருக்கு தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பம்

(தர்மபுரம்)

**நாளை முதல் கிளிநொச்சி மாவட்டத்தில் 20 வயது தொடக்கம் 29 வயதுப்பிரிவினருக்கு தடுப்பூசி ஏற்றும் பணி முன்னெடுக்கப்படவுள்ளதாக மாவட்ட தொற்றுநோயியல் வைத்தியர்.நிமால் அருமைநாதன் தெரிவித்தார்.**

குறித்த விடயம் தொடர்பாக தெரிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது. தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 20-29 வயதுப்பிரிவினர் 28 ஆயிரத்து 482 பேர் உள்ளனர் அவர்களுக்கான முதற்கட்ட தடுப்பூசி ஏற்றும் பணிகள் நாளை 20ஆம் திகதிகிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் ,தர்மபுரம் மத்திய கல்லூரி, முழங்காவில் ஆதார வைத்தியசாலை ,பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும் நாளை மறுதினம் 21ஆம் திகதிசெவ்வாய்க்கிழமை கிளிநொச்சிமத்திய மகா வித்தியாலயம் , உருத்திரபுரம் பிரதேச வைத்தியசாலை, அக்கராயன் மகாவித்தியாலயம், இராமநாதபுரம் மகா வித்தியாலயம் ,முழங்காவில் ஆதார வைத்தியசாலை,தர்மபுரம் மத்தியகல்லூரி ,பளை சுகாதார வைத்திய அதிகாரிஅலுவலகம் என்பவற்றிலும் தடுப்பூசிஏற்றும் பணி முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

(7-4-6-316)

## ஆறுகளைப் பாதுகாப்போம் தொனிப்பொருளில்

# கிளி. அக்கராயன் குளம் புனரமைப்பு

(கண்டாவளை)

'ஆறுகளைப் பாதுகாப்போம்' என்ற அரசாங்கத் தின் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின்கீழ் கிளிநொச்சி அக்கராயன் ஆற்றைப் புனரமைப்பதற்கு நேற்று முன்தினம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்துக்காக சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதனை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான 41 இலட்சத்து 13 ஆயிரத்து 105 ரூபாவை வழங்க திறைசேரி அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அனில் ஜெயசிங்க அறியத்தந்திருப்பதாக மாவட்டச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார், இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணிகள் எதிர்வரும் 3 வாரங்களுக்குள் ஆரம்பிக்கப்படும் என்றும், ஒக்டோபர் மாதத்துக்குள் திட்டத்தை நிறைவேற்றத் தீர்மானித்திருப்பதாகவும் பிரதி நீர்ப் பாசன பொறியியலாளர் ராஜ கோபு மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4-6-315)



# கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை இடைநடுவில் வீட்டுத்திட்டங்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2018 ஆம் ஆண்டு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டு அதற்கான கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் முதற்கட்ட, இரண்டாம் கட்ட கொடுப்பனவுகள் மாத்திரம் வழங்கப்பட்ட நிலையில் வீட்டுத்திட்டங்கள் இடை நடுவில் கைவிடப்பட்டன.

இவ்வாறு வீடுகள் முழுமைப்படுத்தப்படாத நிலையில் அதன் பயனாளிகள் கடந்த மூன்று வருடங்களாக பருவ மழையினால் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கொடுப்பனவுகளை வழங்க புதிய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாதிக்கப்பட்டுள்ள பயனாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்தினால் இது தொடர்பில் குறிப்பிடுகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வெள்ள அனர்த்தவீடுகள் நிர்மானத்திற்காக பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 2 ஆயிரத்து 211 வீடுகள் வழங்கப்பட்டிருந்தன.

இதற்கென 1589 மில்லியன் ரூபாநிதி தேவையென கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் இதில் 428 மில்லியன் ரூபா நிதி மாத்திரமே கிடைக்கப்பெற்று பகுதிக் கொடுப்பனவுகளாக வழங்கப்பட்டுள்ளன. ஏனைய நிதி கிடைக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7-4-6-315)

# நீர் வழங்கல் சபையின் நடமாடும் சேவை

(நெளுக்குளம்)

நாட்டில் நிலவுகின்ற கொரோனா நிலைமையினைக் கருத்திற்கொண்டு நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், பாண்டியன்குளம், மற்றும் மல்லாவி நீர் வழங்கல் திட்ட பயனாளிகளுக்கான மாதாந்த நீர்ப் பட்டியல் கொடுப்பனவுகள் மற்றும் நீர்ப் பட்டியல் நிலுவைகளை இலகுவில் செலுத்துவதற்கான நடமாடும் சேவையானது நாளையும் நாளை மறுதினமும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது.

அதற்கமைய நாளை திங்கட்கிழமை காலை ஒன்பது மணிமுதல் மதியம் பன்னிரண்டு முப்பது மணிவரை நெடுங்கேணி பகுதியிலும் அதே தினம் பிற்பகல் ஒரு மணி முதல் பிற்பகல் நான்கு மணிவரை ஒட்டுசுட்டான் பகுதியிலும் இடம்பெறும்.

அதே போன்று நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை ஒன்பது மணி முதல் மதியம் பன்னிரண்டு முப்பது மணிவரை பாண்டியன் குளம் பகுதியிலும் அதே தினம் பிற் பகல் ஒரு மணிமுதல் பிற்பகல் நான்கு மணிவரை மல்லாவி பகுதியிலும் இடம்பெறும்.

எனவே பயனாளிகள் அனைவரும் தங்களது மாதாந்த நீர்ப்பட்டியல் கொடுப்பனவுகள் மற்றும் நீர்ப் பட்டியல் நிலுவைகளை தங்கள் பகுதி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை காரியாலயத்திற்கு வருகைதந்தோ அல்லது எமது உத்தியோகத்தர்களுக்கோ அழைப்பினை மேற்கொள்ளவதன் மூலமோ பொருத்தமான வழி முறைகளினூடாக மேற் கொள்ள முடியும்.

மேலும் தேசிய நீர் வழங்கல் வடி காலமைப்புச் சபையின் ஸ்மார்ட் சோன்லமான https://ebis.waterboard.lk/smartzone/Tamil/OnlinePayments என்ற ஒன்லைன் மூலமாகவும் தங்களது கொடுப்பனவுகளை இலகுவில் மேற்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(7-4-6-299)


## மரண அறிவித்தல்



திருமதி.

### சந்தானலட்சுமி மயில்வாகனம்

மலர்வு : 09.07.1945 உதிர்வு : 22.08.2021

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சந்தானலட்சுமி மயில்வாகனம் தனது 76வது வயதில் கொழும்பில் காலமானார். அவர் காலம் சென்றவர்களான நடராஜா மற்றும் பகவதி தம்பதியினரின் மகளும், மயில்வாகனம் (Ex Air Ceylon, Air Lanka, Air Force)அவர்களின் அன்பு மனைவியும், கணேஷ் ( ANZ - அவுஸ்திரேலியா), சுமதி (Ex Sri Lankan Airlines), Dr. சியாமளா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் தாயாரும், சுபாஷினி (அவுஸ்திரேலியா),விக்கினா-னந்தா, பிரதீபன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமியாரும், பிரஷாந்தி, பிரதர்ஷன், பிரகா (அவுஸ்திரேலியா), ரவீன் (அவுஸ்திரேலியா),கிஷோக் (அவுஸ்திரேலியா), வைஷ்னி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பாட்டியும், காலம் சென்ற அரசரட்ணம்,சத்யலட்சுமி, சீவரத்தினம், கனகரத்தினம் (அவுஸ்திரேலியா),காலம் சென்ற தனலட்சுமி, ஜெயரட்ணம் (அவுஸ்திரேலியா), பாலச்சந்திரன்,மங்களேஸ்வரி (கனடா), காலம் சென்ற லிங்கநாதன், நந்தகுமார் (கனடா), பிரபாகரன் (இங்கிலாந்து), பிரேமளா ஆகியோரின் சகோதரியுமாவார். அவரின் பூதவுடல்22.08.2021 அன்று பொரல்லை பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

(C 1489) தகவல் - சுமதி (மகள்) - 0773409546



## மரண அறிவித்தல்

### பெரியதம்பி கணேசலிங்கம்

(நல்லைக்கந்தன் றில்லஸ் உரிமையாளர்)



மறவன்புலவை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி கணேசலிங்கம் நேற்று (18.09.2021) சனிக்கிழமை அகால மரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பெரியதம்பி - தில்லைநாயகி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தெய்வானை தம்பதியரின் மருமகனும் கமலேஸ்வரியின் (சின்னம்மா) அன்புக் கணவரும் காண்டீபன் (கனடா), அஜந்தன் (விம்புத் பினான்ஸ் முகாமையாளர்), நிமலன் (நல்லைக்கந்தன் றில்லஸ் நிர்வாகி), நிமல் (ஊவா பல்கலைக்கழகம் 3 ஆம் வருடம்), வர்ஷிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் தாரகாவின் (ஆசிரியை - யாழ். புனித சென். திரேசா மகளிர் கல்லூரி) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.09.2021) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். 88888

கோப்பாய் தெற்கு. கோப்பாய். 076 226 6313 தகவல்:- குடும்பத்தினர்

## +1,983...

சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 502,758 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,260 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றி லிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 431,036 ஆக அதிகரித் துள்ளது. (ம-3)

## நாட்டில் மேலும்...

நாட்டில் மேலும் 84 கொரோனா வைரஸ் தொடர்பான மரணங்கள் உறுதி செய்யப்பட்டன.

நாட்டில் இதுவரை பதிவான கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 12,022 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் நேற்று முன்தினம் 51 ஆண் களும் 33 பெண்களும் மரணித்துள்ள னர்.

34 ஆண்கள் மற்றும் 24 பெண்கள் 60 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்.

15 ஆண்கள் மற்றும் 8 பெண்கள் 30 முதல் 59 வயதுக்குட்பட்டவர்கள்.

2 ஆண்களும் ஒரு பெண்ணும் 30 வயதிற்குட்பட்டவர்கள் என அறிக்கையிடப் பட்டுள்ளது. (ம-3)

## சுகாதார விதி...

னையில் ஆலயக் குருக்கள் உள்ளிட்ட 11 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, ஓமந்தை, நொச்சிக்குளம் சித்திவிநாயகர் ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடத்துவதற்கு ஆலய நிர்வாகத்தினரால் சுகாதாரப் பிரிவினரிடம் அனுமதி கோரப் பட்டிருந்தது.

தற்போதைய கோவிட் பரவல் நிலையை அடிப்படையாகக் கொண்டு ஆலய நிர் வாகத்தினர், உபயகாரர் என 9 பேருக்கே சுகாதாரப் பிரிவினர் அனுமதி வழங்கி யிருந்தனர்.

ஆனால், குறித்த ஆலயத்தில் 20 பேருக்கு மேல் நிற்பதாகவும் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை எனவும் சுகாதாரப் பிரிவினருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து அங்கு சென்ற சுகாதாரப் பரிசோதகர்கள் சுகாதார பிரி வினரின் அறிவுறுத்தலை மீறி ஆலயத் தில் நின்ற 20 பேரிடமும் அன்டிஜன் பரி சோதனை மேற்கொண்டனர்.

இதில் ஆலயக் குருக்கள் உட்பட 6 பேர் கோவிட் தொற்றாளர்களாக இனங்காணப் பட்டுள்ளனர்.

இதனையடுத்து ஆலயம் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதுடன், தொற்றாளர்களும் அவர்களுடன் தொடர்புடையவர்களும் சுகாதாரப் பிரிவினரால் சுய தனிமைப்படுத் தப்பட்டுள்ளனர்.

மேலும் தொற்றாளர்களுடன் தொடர் பைப் பேணியவர்களிடம் முன்னெடுக்கப் பட்ட பரிசோதனையில் மேலும் 5 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,250,299)

## எதிர்வரும்...

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத் தில் கலந்து கொள்வதற்காக உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று சனிக்கிழமை அதிகாலை அமெ ரிக்கா விற்குப் பயணமானார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 76ஆவது பொதுச்சபைக் கூட்டம் அமெரிக்க ஜனாதி பதி ஜோ பைடன் தலைமையில் தலை நகர் நியூயோர்க்கில் எதிர்வரும் செவ் வாய்க்கிழமை (21ஆம் திகதி) ஆரம்ப மாகின்றது.

"கோவிட் - 19 வைரஸ் தொற்றுப் பரவ லில் இருந்து மீள்வதற்கான நம்பிக்கை யின் மூலம் நெகிழ்ச்சியை மேம்படுத்தல், நிலைபேறானதன்மையை மீளக்கட்டி யெழுப்புதல், பூமியின் தேவைகளைக் கவனத்திற்கொள்ளல், மனித உரிமை களுக்கு மதிப்பளித்தல் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மறுமலர்ச்சி" என்ற தொனிப்பொருளில் நடைபெறவுள்ள இம் முறை கூட்டத்தொடரில் உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் பங்கேற்கவுள்ளனர்.

இந்நிலையில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர், சர்வதேச மாநாடொன்றில் பங்கேற்பதற் காக நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லும் முதலாவது சந்தர்ப்பம் இதுவென்பதுடன் ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் அரச தலைவர் என்ற ரீதியில் உரையாற்ற வுள்ள முதல் சந்தர்ப்பமும் இதுவாகும்.

அதன்படி எதிர்வரும் புதன்கிழமை (22 ஆம் திகதி) பொதுச்சபைக் கூட்டத்தின் இரண்டாம் நாள் அமர்வில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரையாற்றவிருப்ப தாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித் துள்ளது. (ம-3)

## நாங்கள் கொல்ல...

நேற்றைய தினம் சிறைக் கைதிகளை நேரில் சந்தித்து கலந்துரையாடிய பின் கருத்து தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து மேலும் அவர் தெரிவித் துள்ளதாவது,

உள்ளே சென்றபோது ஊடகங்களில் வந்த அனைத்து செய்திகளும் உண்மை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

லொஹான் ரத்வத்த என்ற அமைச்சர் மதுபோதையில் வந்தார்; துப்பாக்கியுடன் வந்தார் என அங்கே இருக்கக்கூடிய சிறைக் கைதிகள் எங்களிற்கு நேரடியாக தெரிவித்தனர்.

அவர் மதுபோதையிலிருந்ததால் துப் பாக்கியை எடுத்து லோட் செய்து தன் முன்னால் நீட்டியதாக ஒரு சிறைக்கைதி தெரிவித்தார்.

சற்று பிசகியிருந்தால் அது வெடித் திருக்கும். அது வெடித்திருந்தால் தாங்கள் அனைவரும் விடுதலைப் புலிச் சந்தேக நபர்கள் என்பதால் அவரைக் கொலை செய்ய முயன்றதாகவும் பதிலுக்கு அவர் சுட்டதாகவும் கலவரம் நிகழ்ந்ததாகவும் கதை கட்டியிருப்பார்கள் என கைதிகள் எங் களிடம் தெரிவித்தனர் என மனோ கணே சன் தெரிவித்தார். (ம-3)

## மேலும் ஒரு...

படுத்துவதற்காக இரவு, பகல் பாராது உழைத்த மற்றுமொரு வைத்தியரும் கோவிட் தொற்றுக்கு பலியாகியுள்ளார்.

குருநாகல் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் பணியாற்றிய வைத்தியர் சுகத் பண்டார கொரோனாத் தொற்றினால் உயிரிழந்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக்கு இலக்கான வைத்தியர், குருநாகல் பொது வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில்,நேற்றுக் காலை இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

அவர் தொற்றுக்கு இலக்காகும்வரை, குருநாகல் பொது வைத்தியசாலையில் கொரோனா நோயாளர் பிரிவில் கடமை யாற்றியுள்ளார்.

57 வயதான வைத்தியர் சுகத் பண்டார இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். ஒரு ஓவியராகவும் எழுத்தாளராகவும் அவர் கலைத்துறைக்கு சேவையாற்றி யுள்ளார். (ம-3)

## மதுச்சாலைகளை...

என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் விசனம் வெளியிட்டுள்ளது.

இந்த விடயத்தில் பாதுகாப்புப் பிரிவு முறையாக செயற்பட வேண்டும். சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். சட்ட மானது வெவ்வேறு நபர்களின் கைகளில் ஒப்படைக்கப்படக்கூடாது என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தி யுள்ளது.

இது தொடர்பில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வைத்தியர் பிரசாத் கொலம்பகே இத னைத் தெரிவித்தார். (ம-3)

## இராச வீதியில்...

உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள ஆலயம் ஒன்றுக்குச் சென்றுவிட்டு இராசபாதையூடாக கல்வியங் காடு நோக்கிய திசையில் பயணித்துக் கொண்டிருந்தபோது பின்னால் வந்த இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான வாகனம் திடீரென திருப்ப முற்பட்டு முச் சக்கரவண்டியை மதிலோடு சேர்த்து மோதியதால் இவ்விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தின்போது கோப்பாய் தெற் கைச் சேர்ந்த பெரியதம்பி கணேசலிங்கம் (வயது-56) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான மரண விசா ரணையை யாழ்.போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதி காரி நமசிவாயம் பிறேம்குமார் மேற் கொண்டார். (ம-3)

## மதுபானசாலை...

இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

மதுபானசாலைகளுக்கு அருகில் மக் கள் கூடுவது கோவிட்-19 நோய்த்தொற்றுப் பரவுவதைக் கட்டுப்படுத்துவதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

எந்தவித அத்தியாவசிய சேவையும் இல்லாத மதுபானசாலைகளை மட்டும் திறப்பதன் மூலம் சில்லறை விற்பனை நிலையங்களின் உரிமையாளர்களுக்கு அரசு பெரும் அநீதி இழைத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ம-3)

## ஊரடங்கு...

தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின்போது பேசிய சுகா தார அமைச்சின் செய்தித் தொடர்பாளர், சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத், சம்பந்தப் பட்ட அதிகாரிகள் தவறை மீண்டும் செய் யக்கூடாது என கேட்டுக் கொண்டார்.

மற்ற அனைத்து கடைகளையும் மூட வேண்டிய கட்டத்தில் மதுக்கடைகளை மீண்டும் திறக்க அனுமதி வழங்க எந்த அடிப்படையும் இல்லை என்று அவர் கூறினார்.

சுகாதார அமைச்சு அத்தகைய நட வடிக்கைக்கு ஒப்புக்கொள்ள முடியாது. எனவே இந்த விவகாரம் குறித்து உரிய அதிகாரிகள் உரிய முடிவுகளை எடுக்கு மாறு கேட்டுக்கொண்டார். (ம-3)

## 14 வயது மாண...

வீட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாணவன் கொலை செய்யப்பட்டுள் ளார் என தாயார் சந்தேகம் வெளியிட் டுள்ளார்.

மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள இலுப்பைக் கடவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கள்ளியடிப் பகுதியில் வசித்து வந்த வவுனியாவைச் சேர்ந்த நாகேந்திரன் டிலக்ஷன் (வயது-14) எனும் மாணவன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை தூக்கிட்ட நிலை யில் அவருடைய சடலம் அவரது வீட்டின் சுவாமி அறையில் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

கள்ளியடிப் பகுதியில் வசித்து வந்த வவுனியாவைச் சேர்ந்த நாகேந்திரன் டிலக்ஷன் (வயது-14) எனும் சிறுவன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை கள்ளியடிப் பகுதியில் அரிசி ஆலை ஒன்றுக்கு அரிசி திரிக்க சென்ற நிலையில் அங்கு பணம் திருடப்பட்டதாக அரிசி ஆலை உரிமையாளரின் மகன் குறித்த மாணவனின் நண்பனிடத்தில் கூறியுள் ளார்.

பின்னர் அரிசி ஆலையின் உரிமை யாளரின் மகன் மற்றும் அவரின் நண்பர் கள் சிலர் இணைந்து குறித்த சிறுவனின் வீட்டிற்கு சென்று சிறுவனை தாக்கியதாக வும் சிறுவனின் தாய் தாக்க முயன்றவர் களின் காலில் விழுந்து கதறியதாகவும் இருந் தாலும் சிறுவனை தொடர்ந்து தாக்கி விட் டுச் சென்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்த நிலையில் வீட்டில் மகனை நித்திரையாக்கி விட்டு தாயார் குளித்து விட்டு வந்த நேரம் தாக்கியவர்கள் மறுபடி யும் அவர்களது வீட்டில் இருந்து செல் வதை அவதானித்து தாயார் ஓடி வந்து பார்த்தபோது மகன் தூக்கில் தொங்கிய நிலையில் இருந்ததாகவும் தாயார் தெரி வித்தார்.

இது தற்கொலை அல்ல எனவும் மகன் தற்கொலை செய்யுமளவுக்கு விபரம் தெரியாதவர் எனவும் தாய் தெரிவித்தார்.

குறித்த சிறுவனின் மரணம் தொடர் பாக இதுவரை எவரும் கைது செய்யப்பட வில்லை.

மேலதிக விசாரணைகளை இலுப் பைக்கடவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,285)

## தீயில் எரிந்த...

உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த சோம சேகரன் ரவிச்சந்திரன் (வயது-48) என்ப வரே உயிரிழந்தவராவார்.

தீ பற்றிய கணவரைக் காப்பாற்ற முயன்ற அவரது மனைவி எரிகாயங் களுக்குள்ளாகிய நிலையில்யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார். (ம-3)

## சுத்தியலால்...

ஆயுதத்தால் தலையில் தாக்கப்பட்ட தனால்தான் உயிரிழப்பு ஏற்பட்டது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யின் சட்ட மருத்துவ வல்லுநரினால் அறிக் கையிடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதனால் சம்பவ இடத்துக்கு அண்மை யாக உள்ள கட்டடத் தொகுதியில் பெறப் பட்ட சிசிரிவி பதிவின் அடிப்படையில் மடத் தல் (பெரிய சுத்தியல்) உடன் பயணித்த சந்தேகநபரே இளம் குடும்பத் தலைவரை தலையில் தாக்கி

04

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 09 . 03 . 1946

இறப்பு 18 . 09 . 2021

எமது சங்கத்தின் கணக்காளர்

**ஆ. பத்மதர்சினி** அவர்களின் தந்தையார்

**திரு. சுப்பிரமணியம் ஆனந்தராசா**

அவர்கள் நேற்று 18.09.2021 (சனிக்கிழமை) காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**நிர்வாகத்தினர், அங்கத்தவர்கள், பணியாளர்கள்**
**யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்**

# யாழில் கோவிட்டால் இருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த நபர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்கள் 91,41 வயதுடைய ஆண்கள் ஆவார். (ம-03)


## மணமகள் தேவை

இலங்கையில் பிறந்து Switzerland இல் நிரந்தரமாக வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் தமது 43 வயதுடைய சுயதொழில் புரியும் மகனுக்கு நற்பண்புள்ள அழகிய மணப் பெண்ணை இலங்கையில் தேடுகிறார்கள். மணமகளின் ஜாதகம் மற்றும் சமீபத்திய புகைப்படம் மற்றும் ஏனைய விபரங்களுடன் பின்வரும் மின்னஞ்சலுடன் தொடர்பு கொள்ளவும்.

Jeyaratnam1988@gmail.com

## காணி விற்பனைக்கு



தெல்லிப்பளை வடக்கு, வீமன்காமம் ( டச்சு றோட் ) பகுதியில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
( நில.பர 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் )

நீர்வேலி தெற்கு, கரந்தன் பகுதியில் 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
( நில.பர 1 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் கரந்தன் சந்தியில் இருந்து 200 மீற்றர் தூரம் )

**பார்வையிடும் நேரம்** : காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை.

077 814 7389, 077 614 7333


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**யோகறஞ்சினி நகுலேஸ்வரன்**

(சுமதி)

பிறப்பு : 26.01.1967
இறப்பு : 19.09.2019



நம்ப மறுக்குதம்மா எம் இதயம்
நீ பிரிந்து இரு வருடங்கள் சென்றாலும்
உன் அழகிய சிரிப்பும்
இனிமை நிறைந்த பேச்சும்
எல்லோரையும் ஈர்க்கும் உன்
வசீகரப் புன்னகையும்
உன் உடலை விட்டு உயிர் பிரிந்ததை
அறிந்து இதயமே உறைந்து போய்
நின்றதை யாரறிவார்?
நீ இறக்கவில்லை
எங்களுடன் உயிரோடுயிராய்
என்றுமே நிலைத்திருப்பாய்.

நெல்லியடி ம. மகா வித்தியாலய வீதி,
நெல்லியடி.

குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.